# திரும்பிவருதல், மீள் குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான தொழிற்பாட்டாளரின் கருவித்தொகுதி

## நடவடிக்கைக்கான அழைப்புக் குறித்த நிகழ்ச்சி நிரல்

மனித நேய சேவை அமைப்புகளின்
கூட்டிணையமும், உள்நாட்டில் இடப்பெயர்வு தொடர்பான
புரூக்கிங்ஸ் – **SAIS**
வேலைத்திட்டமும்

**வெழியிடுவோர்:**

**மனிதாபிமான அமைப்புக்களின் ஒன்றியம்**
10, கின்சி டெரஸ்
கொழும்பு - 8
இலங்கை

தொலை / பாக்ஸ் : 94 - 11 - 4610943/4
ஈ – மெயில் : jeevant@sri.lanka.net , cha_info@sri.lanka.net
வெப்தளம் : www.humanitarian-srilanka.org

மற்றும்

**புரூக்கிங்ஸ் - ளுயுஜளு உள்நாட்டில் இடம்பெயர்வு குறித்த கருத்திட்டம்**
1775 மசாச்சூஸெட்ஸ் அவெனியூ, NW
வாஷிங்டன் DC 20036

தொலை : 202 - 797 - 6218
பாக்ஸ் : 202 - 797 - 6003
வெப்தளம் : www.brook.edu

முதல் மற்றும் ஆரம்ப வெளியீடு – மார்ச் 2004

இந்த வெளியீடு ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கிடைக்கும்.

சகல உரிமைகளும் வெளியீட்டாளருக்கே. கற்பித்தல் நோக்கங்களுக்கு இதை எந்த முறையிலும் மீள்பெருக்கம் செய்யலாம். விற்பனைக்கன்று. வேறு நிலைமைகளின் கீழ் பிரதிசெய்வது, ஏனைய வெளியீடுகளில் / மொழிபெயர்ப்புகளில் / தழுவல்களில் பிரதியெடுப்பதற்கு, பிரதி உரிமையாளர்களிடமிருந்து அனுமதி பெறப்படுதல் வேண்டும்.

**ISBN: 955-1041-01-1**

## உன்னடக்கம்


பக்கம்

**முன்னுரை** 1

**நன்றி நவிலல்** 3

**பகுதி 1** 5

**பின்னணி** 5

தொழிற்பாட்டாளரின் கருவித்தொகுதியொன்று ஏன் அவசியம்?

**உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் குறித்த வரைவிலக்கணம்.** 8

**உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் சம்பந்தமான வழிகாட்டற்கோட்பாடுகள்** 8

**திரும்பிவருதல், மீள்குடியேற்றம் மற்றும் மீளிணைப்பு** 8

கருப்பொருள் 01 – பாதுகாப்பு மற்றும் கௌரவமான சூழ்நிலைகளில், சுயவிருப்பத்துடன் திரும்பிவருதல்.
கருப்பொருள் 02 – மீள்வருகையைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் செய்வதில் கூட்டுப் பங்கேற்பு
கருப்பொருள் 03 – பங்கேற்பு மற்றும் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதில் பாகுபாடின்மையும், சமத்துவமும்.
கருப்பொருள் 04 – சொத்துக்களை மீளப்பெறுவதும், இழப்பீடும்
கருப்பொருள் 05 – மனிதநேய அமைப்புகள் பாதிப்புற்றோரை அணுகுதல்.

**நிகழ்ச்சித்திட்டப் பிரதிவிளைவுச் செயற்பாட்டுக்கான ஜனசமூக அடிப்படையிலான கண்ணோட்டம்.** 12

கருப்பொருள் 01 – குடும்ப மற்றும் ஜனசமூக உறவிணைப்புகளைப் பேணிப் பாதுகாத்தல்.
கருப்பொருள 02 – சுய உதவிக்கு ஆதரவு வழங்கும் உத்திகள்
கருப்பொருள் 03 – இடம்பெயர்ந்தோர் தமது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு வலுவளித்தல்.
கருப்பொருள் 04 – தீர்மானம் மேற்கொள்வதில் இடம்பெயர்ந்தோரை ஈடுபடுத்துதல்.
கருப்பொருள் 05 – சுய – சார்பை ஊக்குவித்தல

**இடம்பெயர்வுக்கு முடிவு எப்பொழுது?** **21**

**பகுதி 2** **23**

**திரும்பிவருதல், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான இலங்கையின் குறித்துரைத்த பிரச்சினைகள்** **23**

**நடவடிக்கைக்கான அழைப்பு** **23**

1. தடுப்பு **23**
2. பாதுகாப்பு **25**
3. காணி **27**
4. ஆவணப்படுத்தல் **29**
5. மூலகாரணங்களுக்குத் தீர்வுகாண்பதற்கான கொள்கை குறித்த பரிசீலனைகள். **30**
6. சூழல் **31**
7. மனிதாபிமான உதவி **32**
8. பெண்களும், சிறுவர்களும் **33**
9. பொருளாதாரமும், அபிவிருத்தியும் **37**
10. பின்னூட்டலும்.கண்காணிப்பும் **39**

**பகுதி 3** **40**

**முடிவுரை** **40**

**பின்னிணைப்புகள்** **42**

1. முறையியல் **42**
2. கலந்தாலோசனைகள் **43**

# முன்னுரை

மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பு திரும்பிவருதல், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக்கான தொழிற்பாட்டாளர்களின் கைக்கருவித்தொகுதியை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சியடைகின்றது. ஆரம்ப நோக்கம் தொழிற்பாட்டாளர்களுக்கு உதவும் ஒரு கைக்கருவித்தொகுதியை வடிவமைத்து, அபிவிருத்தி செய்து, தயாரிப்பதாக இருந்தபோதிலும், இந்த ஆவணம் ஒரு "நடவடிக்கைக்கான அழைப்பு" சம்பந்தமான நிகழ்ச்சி நிரலாக அபிவிருத்தியடைந்துள்ளது.

முறையியல் (பின்னிணைப்பு 01) முக்கிய நலன்பிரதிநிதிகளுடன் இருமட்டங்களில் இடம்பெற்ற கலந்தாலோசனைச் செயல்முறையை உள்ளடக்கியதாகும். முதலாவது ஆலோசகர் ஆய்வாளர் கையாளுவதும், உள்ளூர் உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்பவற்றோடு இடம்பெற்ற கலந்துரையாடல்களை உள்ளடக்குவதுமான வெளிக்கள மட்டமாகும். மற்றது இலங்கை அரசாங்கத்தின் அதிகாரிகளுடனும், அகதிகளுக்கான ஐ.நா உயர் ஆணையாளரின் (UNHCR) அதிகாரிகளுடனும், மனித உரிமைகள் ஆணைக்குழுவுடனும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் (பின்னிணைப்பு 02) இடம்பெற்ற உயர்மட்ட பேச்சுவார்த்தைகளாகும்.

கலந்தாலோசனைகளின் விளைவாக, இலங்கையில் நீண்டகால யுத்தம் மற்றும் இடம்பெயர்வு காரணமாக ஏற்பட்ட அனுபவம் தனித்தன்மை வாய்ந்த அம்சங்களைக் கொண்டுள்ளதென்பதும், திரும்பிவருதல், மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி என்பவை சிக்கலான பிரச்சினைகளை உள்ளடக்கியவையென்பதும் தெரியவந்தது. மிகவும் கொடியதும், ஆகுசெலவுமிக்கதுமான யுதத்தத்தில் அதிக துயரங்களை அனுபவித்தவர்கள் நீண்டகால கசப்பான அனுபவங்களோடு வாழும் சிவிலியன்களே ஆவர். ஆகவே புனருத்தாரணம் என்பது அனைத்துமடங்கும் பூரண அணுகுமுறை.

ஒன்றைக் கோரி நிற்பதாகும். அத்தோடு அது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தினுள், வரையறுத்த மூலவளங்களோடு முடிவற்ற தேவைகளை முகாமைத்துவம் செய்யக்கூடிய ஒன்றாகவும் இருத்தல் வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் எமது இலட்சிய தரிசனம் 2006 அளவில் இடம்பெயர்வுக்கு முடிவு கட்டுவதாகும்.

**மனித நேய அமைப்களின் கூட்டமைப்பு**
**கொழும்பு, இலங்கை**
**நவம்பர் 2003**

மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பினால் உருவாக்கப்பட்டுள்ள தொழிற்பாட்டாளர்களின் கருவித்தொகுதி இலங்கையின் இடம்பெயர்ந்த மக்கட்தொகையினர் திரும்பிவருவதற்கும், மீள்குடியேறுவதற்குமான நடவடிக்கை குறித்த, மற்றும் போருக்கான மூலகாரணங்களுக்குத் தீர்வுகாண்பதற்கான முதனிலைப் படிவத்தை வழங்குகின்றது. அது இடம்பெயர்வுக்கும், பாதிக்கப்பட்ட மக்களின் பாரிய துயரங்களுக்கும் முடிவுகட்டுவதற்கான எண்ணக்கரு ரீதியானதும் மற்றும் நடைமுறை சாத்தியமானதுமான கைக்கருவிகளை வழங்குகின்றது. இது இடம்பெயர்ந்த மக்களோடு சம்பந்தமுற்றுப் பணியாற்றும் அனைவருக்கும் இடம்பெயர்வுக்கு வெற்றிகரமாக முடிவுகட்டுவதற்கான நடவடிக்கைகளை இனங்காணவும், நடைமுறைப்படுத்தவும் உதவி வழங்குதல் வேண்டும். இது அரசாங்க மற்றும் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்களால் வரவேற்கப்படவும், நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டிய ஒரு முன்முயற்சி ஆகும்.

**பிரான்சிஸ் எம்.டெங்,**
**உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் விவகாரங்கள் சம்பந்தமான ஐ.நா செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி.**

CHA அமைப்பினால் மிகத்திறமையாக வரையப்பட்டுள்ள தொழிற்பாட்டாளரின் கைக்கருவித்தொகுதி, இலங்கையில் இடம்பெயர்ந்தோர் சுய விருப்பத்தோடு பாதுகாப்பாகவும், நிரந்தரமாகவும் திரும்பிவரக்கூடிய வகையில் சர்வதேச நியமங்களைப் பின்பற்றியுள்ளது. அது இடம்பெயர்வுக்கு வெற்றிகரமான முறையில் முடிவு காண்பதற்கு அவசியமான பல படிகளையும் வழங்குகிறது. உதாரணமாக அது காணிப் பிரச்சினைகள், சொத்து உரிமைக் கோரிக்கைகள், சிறுபான்மையினர் பாதுகாப்பு, நீதிமுறைகள் மற்றும் இடம்பெயர்ந்த நபர்களுக்கும், ஏனைய சகல குடிமக்களுக்கும் உரித்தான பரந்த வீச்சிலான உரிமைகள் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துகின்றது. அது எண்ணிறந்த இடம்பெயர்ந்த நபர்களுக்கு அனுகூலமாக அமைவதோடு, போருக்குப் பிந்திய சமாதானம் மற்றும் ஸ்திரநிலைக்கான முக்கிய பங்களிப்பாகவும் விளங்கும்.

**ரொபேர்ட்டா கோஹன்,**
**இணைப்பாளர், புரூகிங்ஸ் நிறுவனம் ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் உள்நாட்டில் இடம்பெயர்வு குறித்த ஞயுஜஞ கருத்திட்டம்**

# நன்றி நவிலல்

தொழிற்பாட்டாளர்களின் கைக்கருவித்தொகுதி பின்வரும் பெறுமதிமிக்க ஆவணங்களிலிருந்து பயன்பெற்றுள்ளது:

1. உள்நாட்டில் இடம்பெயர்வு சம்பந்தமான வழிகாட்டற் கோட்பாடுகள். – 1998 இல் ஐ.நா சபையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் விவகாரங்கள் சம்பந்தமான செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியால் சமர்ப்பிக்கப்பட்டது. பிரான்சிஸ் எம்.டெங்.

2. உள்நாட்டில் இடம்பெயர்வு சம்பந்தமான மட்டலகுகள் – உள்நாட்டில் இடம்பெயர்வு சம்பந்தமான வழிகாட்டற்கோட்பாடுகளின் அடிப்படையில் நோர்வே அகதிகள் மன்றத்தினாலும் (NRC), மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர் ஆணையாளரினாலும் (OHCHR) அபிவிருத்தி செய்யப்பட்டது.

3. உள்நாட்டில் இடம்பெயர்வு சம்பந்தமான வழிகாட்டற்கோட்பாடுகளைப் பிரயோகிப்பது குறித்த கைநூல் (மனிதாபிமான விவகாரங்களைக் கூட்டிணைப்பு செய்வதற்கான ஐ.நா அலுவலகம் (OCHA) மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்வு குறித்த புரூகிங்ஸ் நிறுவனக் கருத்திட்டம், நவம்பர் 1999).

4. தகவல் பரப்புதல், ஆதரவுப்பிரசாரம் மற்றும் பகுப்பாய்வுக்கான ஒரு கைக்கருவித்தொகுதி – மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு.

5. எல்லைகளினுள் பாரிய அளவில் மனிதர்கள் வெளியேற்றம் – டேவிட் ஏ. கோர்ன் – உள்நாட்டில் இடம்பெயர்வு நெருக்கடிக்கான ஓர் அறிமுகம் (புரூகிங்ஸ்,1999)

6. கைவிடப்பட்ட மக்கள்: உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் சம்பந்தமான விடய ஆய்வுகள், ரொபேர்ட்டா கோஹறன் மற்றும் பிரான்சிஸ் எம். டெங் (புரூகிங்ஸ், 1998)

7. UNHCR செய்திமடல் மற்றும் இலங்கை சம்பந்தமான ஏனைய வெளியீடுகள்

8. வலுக்கட்டாயப் புலம்பெயரல் மீள்பார்வை – இடம்பெயர்வுக்கு முடிவு எப்போது என்பது சம்பந்தமான 2003 மே இதழ்

பின்னிணைப்பு 02 இல் நிரற்படுத்தப்பட்டுள்ளவாறு தமது நேரம் மற்றும் அறிவை எமக்கு வழங்கிய அனைவர்க்கும் நாம் பிரத்தியேகமாக எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். இதுவே இறுதியில் நடவடிக்கைக்கான அழைப்புக்கான வடிவமைப்பையும், உள்ளடக்கத்தையும் வழங்கியது. ஆவணத்தை அபிவிருத்தி செய்யும் செயல்முறை (ஆலோசகர் கூட்டிணைப்பாளர்) திருச்செல்வி. ஜீன் சாமுவேல் அவர்களாலும் (ஆலோசகர் ஆய்வாளர்) திரு. ராஜ்குமார் நாகராஜா அவர்களாலும் மேற்கொள்ளப்பட்டது. இது CHA நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. ஜீவன் தியாகராஜா அவர்களின் வழிகாட்டலுடன் இடம்பெற்றது.

மனித நேய அமைப்புகளின் கூட்டமைப்பு தொழிற்பாட்டளரின் கைக்கருவிகள் தொகுதியை வடிவமைப்பதிலும், அபிவிருத்தி செய்வதிலும் ஆதரவு வழங்கியமை குறித்து உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் சம்பந்தமான புரூகிங்ஸ் SAIS கருத்திட்டத்திற்கு தனது விசேட நன்றிகளைத் தெரிவிக்கின்றது. இந்த ஆவணம் சம்பந்தமான மதிப்பிடற்கரிய கருத்துரைகளை வழங்கியமைக்காக இக்கருத்திட்டத்தின் இணைப்பணிப்பாளர் ரொபேர்ட்டா கோஹன் அவர்களுக்கும் பிரத்தியேகமான நன்றிகள் உரித்தாகுக.

# பகுதி 1

## பின்னணி

இலங்கையின் 20 வருடகால உள்நாட்டு யுத்தம் காரணமாக சுமார் 70,000 பேர் உயிர்களை இழந்தும், 750,000 க்கும் மேற்பட்டோர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தும், மேலும் 700,000பேர் நாட்டை விட்டு வெளியேறியும் உள்ளனர். 2002 பெப்ரவரியில் இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் (L.T.T.E) ஒரு போர் நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். ஆயினும் சமாதானச் செயன்முறையை முன்னெடுத்துச் செல்வதில் எற்பட்ட பல சவால்கள் குறித்த நம்பிக்கையீனம் காரணமாக இடம்பெயர்ந்தோரின் துரித மீள் குடியேற்றம் பாதிப்புற்றது. போர் நிறுத்தத்துக்குப் பின்னர் வடக்குக் கிழக்கில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த 300,000 க்கும் மேற்பட்ட நபர்கள் மீண்டும் வீடுகளுக்குத் திரும்பி வந்துள்ளனர். அத்தோடு இந்தியாவில் வாழும் சில இலங்கை அகதிகளும் திரும்பிவரத் தொடங்கியுள்ளனர். ஆயினும் வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் தமது நாட்டிற்குத் திரும்பிவருவதில் அதிக அக்கறை காண்பிக்கவில்லை. திரும்பி வரும் அகதிகளும் பல்வேறு காரணங்களின் நிமித்தம் உடனடியாகத் தமது வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலை இருப்பதால் அவர்களும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோராகவே காணப்படுகின்றனர். வெளிநாடுகளிலுள்ள 700,000 பேரில் அதிகமானோர் நாட்டுக்குத் திரும்பிவர விரும்பாவிடினும், சுமார் 500,000 பேரை மீள்குடியேற்றம் செய்ய வேண்டியிருக்கும். இவர்களுள் 125,000 பேர் எல்.ரீ.ரீ.ஈ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த தமிழர் அல்லாதோர் ஆவர். சுமார் 50,000 முதல் 70,000 பேர் வரையிலான தமிழர்கள் இராணுவத்தின் வசமிருக்கும் உயர்பாதுகாப்பு வலயங்களைச் சேர்ந்தோராவர். (HSZ)

2002 ஏப்ரல் மாத்தில் அகதிகள், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண அமைச்சினாலும், UNHCR அமைப்பினாலும் கூட்டாக நடத்தப்பட்ட தேசீய மதிப்பாய்வொன்றின் பிரகாரம்:

1. ஆய்வுக்குட்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுள் 63% ஆனோர் வீடுகளுக்குத் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்தனர்.
2. 3% ஆனோர் தாம் வேறு புதிய இடத்திற்குச் செல்ல விரும்புவதாகத் தெரிவித்தனர்.
3. 25% ஆனோர் தாம் தற்போதுள்ள இடத்திலேயே தொடர்ந்தும் தங்க விரும்புவதாகத் தெரிவித்தனர்.
4. 7% ஆனோர் எத்தகைய தீர்மானத்தையும் எடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.

இத்தேடல் முடிவுகளை வைத்து நோக்கும்போது இலங்கை அரசாங்கம் ஏனைய முக்கிய நலன் பிரதிநிதிகளுடன் சேர்ந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின்

தேவைகளை நிறைவேற்றுவதற்கும், அவர்கள் நிரந்தரமான தீர்வுகளைத் தேடிக்கொள்ள உதவுவதற்கும் பொறுப்பேற்க வேண்டும். இச்செயல்முறையில் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பும் சில குறிப்பிட்ட பொறுப்புகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் மாற்றுவழி எதுவுமின்றியே வீடுகளை விட்டுச் சென்றனர். அவர்கள் தற்போது தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான வாய்ப்புகளற்ற சூழலிலேயே தொடர்ந்தும் உள்ளனர். அதேவேளையில் இடம்பெயர்ந்தோரின் அனுபவங்கள் மாறுபாடானவையாகும். அவர்கள் அனைத்துமடங்கும் வகையில் ஒரு பொதுவான அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டாலும், – அனைவரும் உயிர்களைக் காப்பாற்றுவதற்காக இருந்த இடங்களைக் கைவிட்டு தப்பியோட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். – அவர்களின் புவியியல் இட அமைவு, இனத்துவப் பின்னணி, உள்ளூர் மக்களுடன் அவர்களின் உறவுகள் மற்றும் ஏனைய காரணிகள் சம்பந்தமான குறித்துரைத்த நிலைமைகள் வேறுபடுகின்றன.

இடம்பெயர்ந்த நபர்களின் 06 பரந்த வகைப்பிரிவுகள் இனம்காணப்பட்டுள்ளன:

1. இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்வோர்.
2. இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களுக்கு வெளியே வாழ்வோர்
3 இந்தியாவில், தமிழ்நாட்டில் அகதிகளாகவிருந்து திரும்பிவந்து இடைத்தங்கல் முகாம்களில் வாழ்பவர்கள்.
4. மீள்குடியேற்றம் செய்யப்பட்டோர், / புதிய இடங்களில் குடியமர்ந்தோர்.
5. மேற்கத்திய நாடுகளின் அரசாங்கங்களினால் திருப்பி அனுப்பப்படும் அகதிகள் மற்றும்
6. இலங்கைக்கு வெளியில் உள்ள அகதிகள்

இந்த நிலைமையைக் கையாளுவதாயின் தேசீய பொறுப்பை நிறைவேற்றுவதை ஊக்கப்படுத்துவதற்கும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் தனிநபர் மற்றும் கூட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையிலும் நடவடிகக்கைகான ஓர் அழைப்பு அவசியமாகின்றது. ஐ.நா அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்வு சம்பந்தமான வழிகாட்டல் கோட்பாடுகளை இந்த நடவடிக்கைகளுக்கான சட்டமாகப் பயன்படுத்தல் வேண்டும். இந்தக் கோட்பாடுகள் இடம்பெயர்ந்தோருக்கு உதவி செய்து, அவர்களைப் பாதுகாக்குமாறு அரசாங்கங்களையும், அரசசார்பற்ற செயற்பாட்டாளர்களையும், சிவில் சமூகத்தையும், மற்றும் சர்வதேச சமூகத்தையும் வேண்டிக்கொள்வதோடு நடவடிக்கைக்கான ஒரு பொதுவான அடிப்படையையும் வழங்குகின்றது. அனைத்துக்கும் ஆதாரமாக உள்ள இந்த அர்ப்பணிப்பு உணர்வு சமாதானத்திற்கும், அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யுமாறு விடுக்கப்படும் "அழைப்பின" சாத்திய வளத்தை வலுப்படுத்துகின்றது. உண்மையில் இந்த நடவடிக்கைக்கான அழைப்பு வழிகாட்டற் கோட்பாடுகளை இலங்கையின் குறித்துரைத்த சூழமைவுக்கு ஏற்ற வகையிலான விதந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளின் தொகுதியாக மாற்றியமைக்கின்றது. இந்த அழைப்பு உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் சார்பாகவும்,

கடந்தகால மற்றும் நிகழ்கால மோதல்கள், முரண்பாடுகளால் பாதிப்புற்றோரின் சார்பிலும் விடுக்கப்படுகின்றது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கான உதவி தடுப்பு, பாதுகாப்பு மற்றும் அரசியல், பொருளாதார, சமூகத் தீர்வுகளை உள்ளடக்கியதாகவே அமைய வேண்டும்.

மனிதாபிமான உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களின் உடல் ரீதியான பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளைப் பேணி முன்னெடுக்கும் பணியோடு ஒரேவேளையில் இடம்பெறுதல் வேண்டும். அது முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான அரசியல் முன் முயற்சிகள் மற்றும் மீளிணக்கம், அபிவிருத்திக்கான திட்டங்கள் என்பவற்றோடு சேர்ந்து இடம்பெறுதல் வேண்டும். வடிமைக்கப்படும் நிவாரணங்கள் அவசர தேவைகளை நிறைவேற்றுபவையாக மட்டுமன்றி, பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணமாகவிருந்த சூழ்நிலைகளைத் தடுப்பதாகவே அமைய வேண்டும்.

**தொழிற்பாட்டாளர் கருவிகள் தொகுதியொன்று ஏன் அவசியம்?**

தொழிற்பாட்டாளரின் கருவிகள் தொகுதி பின்வருவோருக்கும் உதவும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

1. திரும்பி வருவதற்கு அல்லது மீள்குடியேறுவதற்குத் தீர்மானித்துள்ள உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள்.
2. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் கஷ்டமின்றி நிம்மதியாக திரும்பிவருவதற்கும், மீள்குடியேறுவதற்கும் உதவுவதற்கு விரும்பும் கவனப் பராமரிப்பு வழங்குவோரும், ஏனைய நலன்பிரதிநிதிகளும்.

இது இச்செயல்முறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்குமான ஒரு நடைமுறை வழிகாட்டியாகும். இது உள்நாட்டில் இடம்பெயர்வு சம்பந்தமான வழிகாட்டல் கோட்பாடுகள் மற்றும் பிரத்தியேகமாக திரும்பிவருதல், மீள்குடியேற்ற மற்றும் மீளிணைப்பு சம்பந்தமான 28– 30 கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்ததொன்றாகும். பொருத்தமான விடத்தில் ஏனைய கோட்பாடுகள் சம்பந்தமாகவும் இங்கு குறிப்பிடப்படுகின்றது. இது மனித நேய அமைப்புகளின் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட தகவல்களைப் பரப்புதல், ஆதரவுப் பிரசாரம் மற்றும் பகுப்பாய்வுக்கான கைக்கருவிகள் தொகுதியிலிருந்தும், மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலக ஆவணங்களிலிருந்தும் (OHCHR) மற்றும் UNHCR, நோர்வே அகதிகள் மன்றப் பயிற்சிக் கைநூல் என்பவற்றிலிருந்தும் பயன் பெற்றுள்ளது.

இதைச் செயல்முறைக்கு உதவும் ஒரு நடைமுறை வழிகாட்டியாக ஆக்கும் வகையில் வெளிக்களக் கண்ணோட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழிற்பாட்டாளருக்கான கருவிகள் தொகுதியை எழுதுவதற்கு முன்னர் ஒரு கருத்தொருமிப்பை எட்டும் வகையில் சகல நலன்பிரதிநிதிகளுடனும் இணைந்ததொரு கூட்டம் உட்பட ஒரு பரந்தளவிலான ஆலோசனைச் செயல்முறை இடம்பெற்றது.

## உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் குறித்த வரைவிலக்கணம்.

### முக்கிய எண்ணக்கருக்கள்

> பிரத்தியேகமாக ஆயுத மோதல்களின் விளைவாகவும் அல்லது அவற்றின் தாக்கங்களைத் தவிர்த்துக்கொள்வதற்காகவும், பொது வன்செயல் சூழ்நிலைகள் காரணமாகவும் மனித உரிமை மீறல்கள் காரணமாகவும், அல்லது இயற்கையான அல்லது மனிதாபிமான அனர்த்தங்கள் காரணமாகவும் வலுக்கட்டாயமாகத் தமது வீடுகளை அல்லது வழமையான வாழ்விடங்களை விட்டுச்செல்வதற்கு அல்லது தப்பியோடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டோரும், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நாட்டின் எல்லைகளை தாண்டிச் செல்லாதோருமாகிய நபர்கள் அல்லது அத்தகைய நபர்களைக் கொண்ட குழுக்கள் – உள்நாட்டில் இடம்பெயர்வு சம்பந்தமான வழிகாட்டற் கோட்பாடுகளில் காணப்படும் வரைவிலக்கணம். (1998)

## உள்நாட்டில் இடம்பெயர்வு சம்பந்தமான வழிகாட்டற் கோட்பாடுகள்

## திரும்பிவருதல், மீள் குடியேற்றம் மற்றும் மீளிணைப்பு, கோட்பாடுகள் (28 - 30)

### முக்கிய எண்ணக்கருக்கள் / கருப்பொருட்கள

- திரும்பிவருதல், மீள்குடியேற்றம் மற்றும் மீளிணைப்பு என்பதை வரைவிலக்கணப்படுத்துதல்.
- கருப்பொருள்
  - பாதுகாப்பான மற்றும் கௌரவமான சூழ்நிலைகளில், சுய விருப்பத்துடன் திரும்பிவருதல்.
  - திரும்பிவரும் விடயத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் பங்கேற்பும், முகாமைத்துவமும்.
  - பாகுபாடின்மை
  - சொத்துக்களை மீளப்பெறுதல் அல்லது இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளுதல்.
  - மனிதாபிமான அமைப்புகள் பாதிப்புற்றோரை அணுகுதல்.

**திரும்பிவருவதென்பது** ஒருவரின் ஆரம்பகால வாழ்விடத்திற்கு மீண்டும் திரும்பிச் செல்வதைக் குறிப்பதாகும்.

**மீள்குடியேற்றம்** என்பது (அகதிகள் மீள்குடியேற்றத்திலிருந்து வித்தியாசமானது) நாட்டின் வேறொரு பகுதியில் ஒரு புது வாழ்க்கையை ஆரம்பிக்கும் செயல்முறையைக் குறிப்பதாகும்.

**மீளிணைப்பு** என்பது முன்னாளில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தமது ஆரம்பகால ஜனசமூகத்தினுள் அல்லது ஒரு புதிய ஜனசமூகத்தின் பொருளாதார கலாசார அரசியல் மற்றும் சமூக இழைமானத்தினுள் மீண்டும் பிரவேசிப்பதாகும்.

**கருப்பொருள் 1: பாதுகாப்பான கௌரவமான சூழ்நிலைகளில் சுய விருப்புடன் திரும்பிவருதல்.**

**கோட்பாடு 28 (1)**

> உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் தமது வீடுகளுக்கு அல்லது வழமையான வாழ்விடங்களுக்கு சுயவிருப்புடன் திரும்பி வருவதற்கு அல்லது நாட்டின் வேறொரு பகுதியில் சுய விருப்பத்துடன் மீள்குடியேறுவதற்கு உரிய சூழ்நிலைகளை உருவாக்குவதும், வழிவகைகளை வழங்குவதும் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் பிரதான கடமையாகும். இத்தகைய அதிகாரிகள் திரும்பிவந்த, உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் மீளிணைப்பை இலகுபடுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**சுயவிருப்பத்துடன்** – திரும்பிவருதற்கான தீர்மானம் சுயவிருப்பத்தின் பேரில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இது நிபந்தனைக் கோட்பாடு என்பதை விட அதிகமான ஒன்றாகும். சுயவிருப்பத்துடன் இடம்பெறும் மீள்வருகை நிரந்தரமான, நிலைபேறான ஒன்றாக அமையக்கூடியதாகும். இது தெரிவுச் சுதந்திரம் மற்றும் அறிவுசார் தீர்மானம் என்பவை சம்பந்தப்பட்ட விடயமாகும்.

**பாதுகாப்பு** – பாதுகாப்பாக திரும்பிவருதல் என்பது மூன்று நிலைமைகளில் இடம்பெறலாம்.

1. சட்ட ரீதியான பாதுகாப்பு
2. உடல் ரீதியான பாதுகாப்பு
3. பொருள் ரீதியான பாதுகாப்பு

**கௌரவம்** – இது பாதுகாப்பைப் போன்று வெளிப்படையாகத் தெரியக்கூடிய விடயமல்ல. இதன் கருத்து மரியாதையுடன் நடத்தப்படுதல், அங்கீகாரம் மற்றும் உரிமைகள் பூரணமாக மீண்டும் வழங்கப்படுதல் என்பவையாகும்.

**கருப்பொருள் 2: திட்டமிடலிலும், திரும்பிவருவதைக் கையாள்வதிலும் கூட்டுப் பங்கேற்பு**

**கோட்பாடு 28 (2)**

> உள்நாட்டில் இடம் பெயர்ந்த நபர்கள் அவர்கள் திரும்பிவருதல் அல்லது மீள்குடியேற்றம் மற்றும் மீளிணைப்பு விடயங்களில் பூரணமாக பங்கேற்பதை உறுதி செய்யும் வழியிலான விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

"சுயவிருப்பு" மற்றும் கௌரவம் போன்ற மூலகங்களின் உட்கிடையான கருத்து உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தமது மீள்வருகை அல்லது மீள்குடியேற்றம் மற்றும் மீளிணைப்பு என்பவற்றைத் திட்டமிடுவதிலும், கையாள்வதிலும் பங்குபற்ற வேண்டும் என்பதாகும். இடம்பெயர்ந்தோரை இவ்விடயங்களில் ஈடுபடுத்துவது அவர்களின் மீள்வருகை அல்லது மீள்குடியேற்றத்தை மேலும் வெற்றிகரமானதாக்கவும் நிலைபேறானதாக்கவும் உதவும்.

**கருப்பொருள் 3: பாகுபாடின்மையும். அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதில் சமத்துவமான பங்கேற்பும்**

**கோட்பாடு 29 (1)**

> தமது வீடுகளுக்கு அல்லது வழமையான வாழ்விடங்களுக்கு திரும்பிவந்த அல்லது நாட்டின் வேறொரு பகுதியில் மீள்குடியேறிய உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கெதிராக அவர்கள் இடம்பெயர்ந்தோர் என்பதற்காக எதுவித பாகுபாடும் காட்டப்படலாகாது. அவர்கள் சகல மட்டங்களிலும் பொதுவிவகாரங்களில் சமமாகப் பங்கேற்பதற்கும், பொதுச்சேவைகளை சமமான முறையில் பெற்றுக்கொள்வதற்கும் உரிமையுள்ளவர்களாவர்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் பாகுபாட்டு ரீதியான செயற்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டு, இலகுவில் பலியாகக்கூடியோராவர். இதனால் சட்டத்தின் முன் சமத்துவம், சட்டத்தின் சமமான பாதுகாப்பு மற்றும் பாராபட்சமின்மை என்பவை சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் மூலாதார கோட்பாடுகளாக உள்ளன. பாராட்சமின்மை அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ள விடயப் பரப்புகள் பின்வருமாறு:

1. "சட்டத்தின் முன் சகல நபர்களும் சமத்துவமானவர்கள் என்பதோடு, அவர்கள் எவ்வித பாராபட்சமும் இன்றி சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கும் உரித்துடையோராவர்." (உறுப்புரை 26 – ICCPR)
2. கல்வி, சுகாதார சேவைகள் போன்ற பொதுச்சேவைகள் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாகவிருத்தல்.
3. பொதுவிவகாரங்கள் மற்றும் வேலைவாய்ப்பு என்பவை சகலருக்கும் கிடைக்கக்கூடியதாயிருத்தல்.
4. உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஜனசமூகங்களுள் பெண்கள் போன்ற இலகுவில் பலியாகக்கூடிய குழுக்களுக்கு அனுகூலங்கள் பாரபட்சமற்ற முறையிலும், சுதந்திரமாகவும் கிடைக்கக்கூடியதாயிருத்தல்.
5. திரும்பிவரும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் "எதிரிகளாக" க்கருதப்படாமலும், நடத்தப்படாமலும் இருத்தல்.

**கருப்பொருள் 4: சொத்துக்களை மீண்டும் பெற்றுக்கொள்ளுதல் அல்லது இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளுதல்.**

## கோட்பாடு 29 (2)

| |
|---|
| திரும்பிவந்த நபர்கள் / அல்லது மீள்குடியேறிய உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் விட்டுச்சென்ற அல்லது இடம்பெயர்வின்போது அவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது உடைமைகளை இயன்றவரையில் மீண்டும் பெற்றுக்கொள்ள உதவுவது தகுதிவாய்ந்த அதிகாரிகளின் கடமையும், பொறுப்புமாகும். இத்தகைய சொத்து அல்லது உடைமைகளை மீட்டெடுப்பது சாத்தியமில்லாவிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரிகள் இந்த நபர்களுக்குப் பொருத்தமான நட்டஈட்டை அல்லது வேறு ஒரு வகையிலான நியாயமான இழப்பீட்டை வழங்க வேண்டும், அல்லது அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ள உதவிசெய்தல் வேண்டும். |

வழிகாட்டற் கோட்பாடுகளில் இடம்பெறும் சொத்து சம்பந்தமான பிரச்சினை பல்பரிமாணம் கொண்டதாகும். அது இடம்பெயர்வுக்கு முன்பு வைத்திருந்த சொத்துக்களின் பாதுகாப்புக்கு மாத்திரமன்றி இடம்பெயர்வின்போது தேடிக்கொண்ட சொத்துக்களின் பாதுகாப்புக் குறித்தும் கவனம் செலுத்துகின்றது.

1. ஒருவரின் தனிப்பட்ட சொத்தை திரும்பவும் ஒப்படைப்பது கௌரவமான முறையில் திரும்பிச் செல்வதற்குத் தீர்மானகரமான முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

2. திரும்பிவருதல் செயல்முறையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு இயன்ற அளவுக்கு அவர்களின் ஜீவனோபாயத்துக்கு அவசியமான சொத்துக்களை அவர்களின் ஆரம்ப வாழ்விடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான உதவிகளை வழங்குதல் வேண்டும்.

3. குறுகிய தவணை, நடுத்தவணை மற்றும் நீண்டதவணை அடிப்படையில் நிலைபேறான வாழ்வுக்குக் காணிகளைப் பெற்றுக்கொள்வது, விசேடமாக, விவசாயக் காணிகளைப் பெற்றுக்கொள்வது, தீர்மானகரமான ஒன்றாகும்.

4. சொத்துக்கள் சம்பந்தமான பிணக்குகள் தொடரும் மோதல்களுக்குக் காரணமாகின்றன. ஆகவே உள்ளூரில் முரண்பாட்டுத் தீர்வுத் தொழில்நுட்பங்கள் முக்கியம் பெறுகின்றன.

**கருப்பொருள் 5: மனிதாபிமான அமைப்புகள் பாதிப்புற்றவர்களுடன் தொடர்புகொள்ளக்கூடியதாயிருத்தல்.**

**கோட்பாடு 30**

சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களுக்கும் மற்றும் ஏனைய பொருத்தமான செயற்பாட்டாளர்களுக்கும் அவர்களின் பணிப்பாணையைப் பிரயோகிக்கும் விடயத்தில், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் திரும்பிவருதல் அல்லது மீள்குடியேற்றம் மற்றும் மீளிணைப்பு விடயங்களில் அவர்களோடு துரிதமாகவும், தடைகளற்ற விதத்திலும் அணுகிப் பணியாற்றுவதை சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளும் இலகுபடுத்துதல் வேண்டும்.

1. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் உதவிகளைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்யும் கண்ணோட்டத்தில் இது முக்கியமானதாகும். (கோட்பாடு 3 உதவியைக் கோருவதற்கும், பெற்றுக்கொள்வதற்குமான உரிமை). அத்தோடு மனிதாபிமான உதவிகள் சுதந்திரமாகச் செல்வதையும், உரியவர்களுக்குக் கிட்டுவதையும் உறுதிசெய்தல் வேண்டும். (கோட்பாடு 25 (3) உதவிகள் விநியோகத்தைப் பாதுகாத்தல்,

**நிகழ்ச்சித்திட்டப் பிரதிவிளைவுச் செயற்பாட்டுக்கான ஜனசமூக அடிப்படையிலான கண்ணோட்டம்.**

உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் உதவியையும், பாதுகாப்பையும் செயலற்ற வகையில் "பெற்றுக்கொள்வோர்" அல்ல. மாறாக, அவர்கள் தமது தேவைகளை இனங்கண்டுகொள்வதிலும், தீர்த்துக்கொள்வதிலும் துடிப்பான செயற்பாட்டாளர்களாக விளங்குதல் வேண்டும். இதன் பிரகாரம் இடம்பெயர்வு சம்பந்தமான சூழ்நிலைகளுக்குப் பிரதிவிளைவு காண்பிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஜனசமூகங்களின் இயலுமைகளைப் பயன்படுத்துபவையும், அவற்றின் மீது கட்டியெழுப்புபவையுமான வழிகளில் வடிவமைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு செய்வதன் முக்கியத்துவம் வழிகாட்டற் கோட்பாடுகள் முழுவதையும் மற்றும் அவை கையாளும் உள்நாட்டில் இடம்பெயர்வு குறித்த சகல கட்டங்கள் மற்றும் அம்சங்களையும் ஊடறுக்கும் ஒரு கருப்பொருளாக உள்ளது.

**நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பு பின்வரும் முக்கிய விடயங்களை உள்ளடக்குதல் வேண்டும்:**

### முக்கிய கருப்பொருட்கள் / எண்ணக்கருக்கள்

- உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தமது சொந்தத் தேவைகளை இனம்காண்பதிலும், பூர்த்தி செய்வதிலும் செயலற்றவர்களாயிருப்பதில்லை, மாறாக அவர்கள் முக்கியமான செயற்பாட்டாளர்கள் ஆவர்.
- "பெற்றுக்கொள்வோர்" மூலவளங்களாதல்.
- உள்நாட்டில் இடம்பெயர்வுக்கான பிரதிவிளைவுச் செயற்பாடுகள். இடம்பெயர்ந்தோரின் கருத்துக்களை கவனத்தில் கொள்வதோடு அவர்களின் இயலுமைகளைப் பயன்படுத்துவதும் அவற்றின் மீது கட்டியெழுப்புவதும் அவசியமாகும்.
- கருப்பொருட்கள்
  - குடும்ப மற்றும் ஜனசமூக உறவிணைப்புகளை பேணிப் பாதுகாத்தல்.
  - சுய உதவி உத்திகளுக்கு ஆதரவு வழங்குதல்.
  - தமது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு வலுவளித்தல்.
  - உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களைத் தீர்மானம் மேற்கொள்வதில் ஈடுபடுத்துதல்.
  - சுயசார்பை ஊக்குவித்தல்

**கருப்பொருள் I : குடும்ப மற்றும் ஜனசமூக உறவிணைப்புகளைப் பேணிப்பாதுகாத்தல்.**

**குடும்ப உறவிணைப்புகளைப் பேணிப்பாதுகாத்தல் :**

**கோட்பாடு 17**

1. தனது குடும்ப வாழ்க்கைக்குரிய மதிப்பைப் பெற்றுக்கொள்ளும் உரிமை ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் உள்ளது.

2. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் விடயத்தில் இந்த உரிமையை மதிக்கும் விதத்தில் அவர்கள் ஒன்றாய்ச் சேர்ந்திருக்க அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

3. இடம்பெயர்வினால் பிரிவுற்ற குடும்பங்கள் இயன்ற அளவு விரைவில் ஒன்றிணைக்கப்படுதல் வேண்டும். பிராத்தியேகமாக, சிறுவர்கள் சம்பந்தமுற்றிருக்கும் தருணங்களில் இத்தகைய குடும்பங்கள் துரிதமாக ஒன்றிணைவதற்கான சகல பொருத்தமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். குடும்பங்களை மீளிணைக்கும் பணியில் பொறுப்புள்ள அதிகாரிகள் குடும்ப அங்கத்தினர்களின் விசாரணைகளுக்கு உதவிசெய்வதோடு, மனிதாபிமான அமைப்புகளினதும் பணியை ஊக்கப்படுத்தி அவற்றோடு ஒத்துழைத்தல் வேண்டும்.

4. முகாம்களில் வைக்கப்படுவதன்மூலம் தனிநபர் சுதந்திரம் வரையறுக்கப்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்த குடும்பங்களின் அங்கத்தினர்கள் ஒன்றாக வாழும் உரிமையைப் பெற்றவர்களாவர்.

குடும்பங்களை ஒன்றிணைப்பதற்கான முயற்சிகள் துணையற்ற அல்லது பிரிந்த சிறுவர்களுக்கான ஆதரவுக் கட்டமைப்புக்களை உருவாக்குவதோடு, இடம்பெயர்ந்த நபர்கள் தமது கிராமத்தவர்களுடன் இருப்பதற்கு அல்லது மீண்டும் இணைந்து கொள்வதற்கு வழிவகுப்பதால் இவற்றுக்கு உயர்வான முன்னுரிமை அளிக்கப்படுதல் வேண்டும்.

## கோட்பாடு 16 (1) மற்றும் (2)

1. சகல உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கும் காணமற்போன உறவினர்களின் கதி மற்றும் அவர்களின் இருப்பிடம் குறித்து அறிந்துக் கொள்வதற்கான உரிமை உள்ளது.

2. காணமற்போனதாகக் கூறப்படும் உள்நாட்டில் இடம் பெயர்ந்த நபர்களின் கதி மற்றும் இருப்பிடம் குறித்து அறிந்து கொள்வதற்கு முயற்சி எடுப்பதோடு, இப்பணியில் ஈடுபட்டுள்ள இயைபுள்ள சர்வதேச நிறுவனங்களுடனும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒத்துழைத்தல் வேண்டும். காணாமற்போனோரின் உறவினர்களுக்கு விசாரணை முன்னேற்றம் குறித்து தகவல் வழங்குவதோடு ஏதாவது பெறுபேறுகள் கிடைத்தாலும் அறிவித்தல் வேண்டும்.

**ஜனசமூக உறவிணைப்புகளைப் பேணிப்பாதுகாத்தல் :**

ஜனசமூகக் கட்டமைப்புக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு மிகவும் அடிப்படையான பாதுகாப்பை வழங்குவனவாகும். ஜனசமூக உறவிணைப்புகள் பலவீனமாகும் போது அல்லது துண்டிக்கப்படும்போது உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் இலகுவில் பலியாகும் தன்மையும், அதிகரிக்கின்றது. அடைக்கலம் புகுந்த பிரதேசங்களில் அல்லது மீண்டுவருதல் அல்லது மீள்குடியேற்றப் பிரதேசங்களிலுள்ள உள்ளூர் ஜனசமூகங்கள் உட்பட, ஜனசமூகங்களுடனான உறவிணைப்புக்களைப் பேணும் அல்லது மீண்டும் ஏற்படுத்தும் நடவடிக்கைகள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு மிகவும் முக்கியமானவையாகும்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் குழுக்கள் மத்தியில் ஜனசமூக அடையாளத்தைப் பேணுவதும், அவர்கள் ஜனசமூக விவகாரங்களில் பங்கேற்பதும் கவனம் செலுத்தப்பட வேண்டிய காரணிகளாகும். உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கட் தொகையினரின் மொழிப்பாரம்பரியம், மதம் அல்லது நம்பிக்கைகள் மற்றும் கலாசாரத் தனித்துவம் என்பவற்றுக்கும் மதிப்பளிப்பது முக்கியமானதாகும்.

## கோட்பாடு 22

முகாம்களில் இருப்போரும் சரி, ஏனையோரும் சரி, உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் அவர்களின் இடம்பெயர்வு காரணமாகப் பின்வரும் உரிமைகளை அனுபவிப்பதில் எவ்வித பாகுபாடும் காட்டப்படுதலாகாது:

(அ) சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சி, மதம் அல்லது விசுவாசம், அபிப்பிராயம் மற்றும் கருத்தை வெளியிடுதல் சம்பந்தமான உரிமைகள்.

(ஆ) வேலைவாய்ப்புகளைச் சுதந்திரமாகத் தேடுவதற்கான உரிமையும், பொருளாதார நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான உரிமையும்.

(இ) ஜனசமூக விவகாரங்களில் சுதந்திரமாக இணைந்துகொள்ளவும், சமத்துவமாகப் பங்கேற்பதற்குமான உரிமை.

(ஈ) வாக்களிப்பதற்கும், அரசாங்க மற்றும் பொதுவிவகாரங்களில் பங்குபற்றுவதற்குமான உரிமை. இது இந்த உரிமையைப் பிரயோகிப்பதற்கு அவசியமான வழிவகைகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையையும் உள்ளடக்குவதாகும்.

(உ) தாம் விளங்கிக்கொள்ளும் ஒரு மொழியில் தொடர்பாடல்களைச் செய்வதற்கான உரிமை.

## கோட்பாடு 23 (2)

அ. ஓவ்வொரு மனிதருக்கும் கல்வி பெறுவதற்கான உரிமையுள்ளது.

ஆ உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் விடயத்தில் இந்த உரிமைக்கு வலுவளிக்கும் வகையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இத்தகைய நபர்கள், பிரத்தியேகமாக இடம்பெயர்ந்த சிறுவர்கள், கல்வி பெறுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
இக்கல்வி முதனிலை மட்டத்தில் இலவச, கட்டயாக் கல்வியாக இருத்தல் வேண்டும். இக்கல்வி அவர்களின் கலாசார அடையாளம், மொழி மற்றும் மதம் என்பவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

**கருப்பொருள் II : சுய – உதவிக்கு ஆதரவளிக்கும் உத்திகள்.**

உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தமது முன்னைய குடும்ப அல்லது ஜனசமூக உறவிணைப்புக்களைத் தொடர்ந்து பேணுவதற்கு அல்லது மீண்டும் ஏற்படுத்திக் கொள்வதற்கு அவர்களுக்கு உதவிவழங்கப்படுவது முக்கயமானதாகும். உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் தமது தேவைகள் குறித்துக் கூட்டான முயற்சிகளை மேற்கொள்ளும் விடயத்தில் இப்புதிய ஜனசமூக உணர்வு வெளிப்படுகின்றது. இடம் பெயர்ந்த மக்களிடையிலும், திரும்பி வரும் அல்லது மீள்குடியேற்ற உள்ளூர் ஜனசமூகங்களிலும் மேற்கொள்ளப்படும் முரண்பாட்டுத் தீர்வு மற்றும் மீளிணக்க முன்முயற்சிகள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் பாதுபாப்புக்கான பங்களிப்பை வழங்கி, அவர்கள் இந்த சமூகங்களோடு மீளிணைப்புப் பெற்றுக்கொள்வதற்கு உதவுகின்றன.

**கருப்பொருள் III : இடம்பெயர்ந்தோர் தமது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் விதத்தில் அவர்களுக்கு வலுவளித்தல்.**

**கோட்பாடு 3 : (2)**

உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் இந்த (தேசீய) அதிகாரிகளிடமிருந்து பாதுகாப்பையும், மனிதாபிமான உதவிகளையும் கோருவதற்கும், அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிமையுள்ளோராவர். இத்தகைய வேண்டுகோளை அவர்கள் விடுப்பதன் காரணமாக அவர்களுக்குத் தொடர் தொல்லை விளைவிப்பதோ தண்டனை வழங்குதோ ஆகாது.

**கோட்பாடு 22 (1) (C)**

1. முகாம்களிலும், அவற்றுக்கு வெளியிலும் வாழும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு எதிராக, அவர்கள் இடம்பெயர்ந்தோர் என்ற காரணத்துக்காகப் பின்வரும் உரிமைகளை அனுபவிப்பதில் பாகுபாடு எதுவும் காட்டப்படுதலாகாது :

   (C) சுதந்திரமாகக் கூட்டம் கூடும் உரிமையும், ஜனசமூக விவகாரங்களில் சமத்துவமாகப் பங்கேற்கும் உரிமையும்.

உள்நாட்டில் இடம்பெயர்தோர் கூட்டாகத் தமது உரிமைகளைப் பாதுகாத்து, முன்னெடுக்கும் நோக்கத்தில் தம்மை விதிமுறையான குழுக்களாக அமைத்துக்கொள்ளலாம். உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் அமைப்புகள் ஆதரவு தேடும் பிரசாரங்களை மேற்கொள்வதற்கு உகந்த சூழல்களை உறுதிசெய்வது அதிகாரிகளின் கடமையாகும்.

## கருப்பொருள் IV : இடம்பெயர்ந்ததோரைத் தீர்மானம் மேற்கொள்வதில் ஈடுபடுத்தல்

உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தமது வாழ்கையைப் பாதிக்கும் தீர்மானங்களில் சம்பந்தமுற வேண்டும். அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது குறித்த நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைப்பதில் அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பது இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் பொருத்தம் மற்றும் பயனுறுதியை உறுதிப்படுத்த உதவும்.

### கோட்பாடு 7 (3) (டி) மற்றும் (உ)

இடப்பெயர்வானது ஆயுதமோதல்கள் மற்றும் அனர்த்தங்கள் குறித்த அவசரகால நிலைமைகளின்போது ஏற்படாதிருந்தால், பின்வரும் உத்தரவாதங்கள் இருத்தல் வேண்டும்.

(b) இடம்பெயர்வோரின் சுதந்திரமான, அறிவுபூர்வமான சம்மதம் பெறப்படுதல் வேண்டும்.

(c) புதிய இடத்தில் குடியேறுவதைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் விடயத்தில், பிரத்தியேகமாகப் பெண்களை ஈடுபடுத்துவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயற்சி செய்தல் வேண்டும்.

### கோட்பாடு 28 (2)

உள்நாட்டில் இடம் பெயர்ந்த நபர்கள் தமது மீள்வருகை அல்லது மீள்குடியேற்றம் அல்லது மீளிணைப்புச் சம்பந்தமான திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தில் பூரணமாகப் பங்கேற்பதை உறுதிசெய்யும் விதத்தில் பிரத்தியேக முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

முன்னரே கூறியதுபோன்று கோட்பாடு 28 (2) மீள்வருகை அல்லது மீள்குடியேற்றம் மற்றும் மீளிணைப்பைத் திட்டமிடுதல் மற்றும் முகாமைத்தும் செய்தலில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் பூரணமாகப் பங்கேற்பதைக்கோரி நிற்கின்றது. இடம்பெயர்ந்தோரின் கருத்துக்களைக் கவனிப்பதும், மக்களின் சகல பிரிவினரதும் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதும் அவசியமாகும்.

பெண்களும், சிறுவர்களும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருள் பெரும்பான்மையினராக விளங்குகின்ற போதும், அனேகமான சந்தர்ப்பங்களில் பெண்களோடு கலந்தாலோசிப்பது மற்றும் அவர்களின் கருத்துக்களைக் கவனிப்பது உதாசீனம் செய்யப்படுகின்றது.

## கோட்பாடு 7 (3) (d)

இடம்பெயர்வு ஆயுதமோதல்கள் மற்றும் அனர்த்தங்கள் குறித்த அவசரகால நிலைகளில் ஏற்படாதவிடத்து, பின்வரும் உத்தரவாதங்கள் இருத்தல் வேண்டும்.

(d) கல்வியைத்திட்டமிடுதல் மற்றும் முகாமைத்துவம் செய்வதில் பாதிக்கப்பட்டோரை, பிரத்தியேகமாகப் பெண்களை ஈடுபடுத்துவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## கோட்பாடு 18 (3)

...... அடிப்படை வழங்கல்களைத் திட்டமிடுவதிலும், விநியோகிப்பதிலும் பெண்களின் பூரணமான பங்கேற்பை உறுதிப்படுவதற்கான விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**கருப்பொருள் V : சுய - சார்பை ஊக்குவித்தல்**

விசேடமாக நீண்டகாலக் கண்ணோட்டத்தில் இடம்பெயர்ந்தோரின் மூலவளங்கள் மற்றும் இயலுமைகளைப் பயன்படுத்துவதும், அவற்றின் மீது கட்டியெழுப்புவதுமான நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைப்பது இன்றியமையாததாகும். இடம்பெயர்ந்தோர் சுயசார்பைப் பெற்றுக்கொள்ளாதவரையில் அவசர காலக் கட்டம் முடிந்து நீண்டகாலத்துக்குப் பின்னரும் நிவாரண உதவிகளை நம்பி வாழ்வோராகவே இருப்பர்.

**கோட்பாடு 22 (b)**

முகாம்களுக்குள்ளும், அவற்றுக்கு வெளியிலும் வசிக்கும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் அவர்கள் இடம் பெயர்ந்தோர் என்ற காரணத்தால் பின்வரும் உரிமையை அனுபவிக்கும் விடயத்தில் அவர்களுக்கெதிராக எவ்விதமான பாகுபாடும் காட்டப்படுதலாகாது:

(b) வேலை வாய்ப்புக்களைச் சுதந்திரமாகத் தேடும் உரிமையும், பொருளாதார நடவடிக்கைகளில் பங்கேற்கும் உரிமையும்.

இடம்பெயர்வு நீண்டகாலங்களுக்கு நீடிக்கும் சூழ்நிலைகளில் திறன்கள் இழக்கப்படுவது ஒரு பாரதூரமான இடர்வரவாகும். உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் தற்போதைய வருமானம் பிறப்பிக்கும் நடவடிக்கைகள் அவர்கள் தமது ஆரம்ப வாழ்விடங்களில் ஈடுபட்டிருந்த செயற்பாடுகளை விட வித்தியாசப்படின், புதிய திறன்களின் அபிவிருத்தி அவசியப்படக்கூடும்.

**கோட்பாடு 23 (4)**

உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு, பிரத்தியேகமாக வளர் இளமைப் பருவத்தினர்க்கும், பெண்களுக்கும் அவர்கள் முகாம்களில் இருந்தாலும் சரி, அவற்றுக்கு வெளியில் வாழ்ந்தாலும் சரி, இயன்ற அளவு விரைவில் கல்வி மற்றும் பயிற்சி வசதிகள் வழங்கப்படல் வேண்டும்.

மேற்கூறிய கோட்பாடு கல்வியையும், பயிற்சி வசதிகளையும் பெற்றுக்கொள்வதற்கான பெண்களின் உரிமையை விசேடமாக வலியுறுத்தும் ஒன்றாகும்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குதல் வேண்டும்.

# இடம் பெயர்வுக்கு முடிவு எப்பொழுது ?

இது பெரிதும் விவாதிக்கப்படும் ஒரு விடயமாகும். நிலையான தீர்வொன்று எட்டப்படும்போது இடம்பெயர்வுக்கு முடிவு ஏற்படும் ஆயினும், இடம்பெயர்வு எப்பொழுது முடிவடையும் என்பதைத் தீர்மானிப்பது மிகவும் சிக்கலான விடயமாகும். இதை இனங்காணப்பட்ட 03 அளவு கோல்கள் மூலம் அணுகலாம்.

**01. காரண அடிப்படையிலான அளவுகோல்.**

உள்நாட்டில் இடம்பெயர்வுக்கான காரணங்கள் தற்போது இல்லை.

இலங்கையில் போர்நிறுத்தம் நிலவுகின்ற வேளையிலும், சமாதானச் செயல்முறை இன்னும் இறுதியாக்கப்படவில்லை. பயனுறுதியைப் பொறுத்தவரையில் இது இன்னமும் யுத்தத்திற்கும் ஓர் இறுதியான சமாதானத்திற்கும் இடைப்பட்ட நிலைமாற்றக் காலப்பகுதியாகும். ஆகவே உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கான நிலையான தீர்வுகள் கட்டாயம் தொடருமென்று கூறமுடியாது. சூழ்நிலைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், சில நிறுவனங்கள் மேலும் ஸ்திரமான நிலைமைகள் ஏற்படும் வரை மீள்வருகை உசிதமானதல்லவென்று தெரிவிக்கின்றன.

போர் நிறுத்தமென்பதன் கருத்து இடம்பெயர்ந்தோர் திரும்பி வருவதற்கான சூழல் ஏற்பட்டுவிட்டது என்பதல்ல. திரும்பிவரும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தமது சொந்த முன்முயற்சியின் பேரில் அல்லது ஆதரவு முறைமைகள் மற்றும் வழிமுறையமைப்புக்களின் உதவியோடு அவ்வாறு செய்கின்றனர். ஆகவே பயனுறுதியைப் பொறுத்தவரையில் திரும்பிவருதலென்பது உத்தியோக பூர்வமான ஒன்றல்ல. மீள்வருகையைப் பூரணமாக நியாயப்படுத்துவதற்கு இடம் பெயர்வுக்கான ஆரம்ப காரணங்களுக்கு இறுதித் தீர்வொன்று காணப்படல் வேண்டும்.

**2. தீர்வுகள் அடிப்படையிலான அளவுகோல்கள்**

திரும்பி வருவதே மிகச்சிறந்த விருப்புத் தெரிவாகவுள்ளது.

ஆயினும் பின்வரும் விடயங்களை மனதிற் கொள்ளல் வேண்டும்.

1. திரும்பி வரும் இடங்களில் பாதுகாப்பின்மை
2. மீளிணைப்புக்கான உதவிகள் போதாமை
3. சொத்துகளுக்கான இழப்பீடுகள்
4. சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்
5. சுயதேவைப் பூர்த்தி
6. திரும்பிவருதல் சுயவிருப்பினடிப்படையில் இடம் பெறுதல் வேண்டும்.

மேலும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் திரும்பிவந்தாலும், வெறுமனே திரும்பிவருவது அல்லது மீள் குடியேற்றம் இடம்பெயர்வு முடிவுக்கு வந்து விட்டதற்கான அடிப்படையாகக் கொள்ளப்படக் கூடாது. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு தம்மை மீளிணைத்துக் கொண்ட இடத்தில் தொடர்ந்தும் இருப்பதற்கு அல்லது நாட்டின் வேறொரு பகுதிக்குச் செல்வதற்கு உரிமையுள்ளது என்பதையும் கவனித்தல் வேண்டும்.

### 3. தேவைகள் அடிப்படையிலான அளவுகோல்கள்

> உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு குறித்துரைப்பான தேவைகளும், பலவீனங்களும் முடிவுக்கு வரும்பொழுது

இந்த அளவுகோல்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் சில சந்தர்ப்பங்களில் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்போடு இலங்கை அரசாங்கத்திடமிருந்து பாதுகாப்பையும், உதவிகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய இயலுமையைப் பெறும் நேரத்தில் பொருத்தமானவையாகும்.

### ஒன்றிணைந்த அணுகுமுறை

மேலே கூறப்பட்ட மூன்று அளவுகோல்களும் தனித்தனியே செயற்படுபவை அல்ல. அவற்றுள் பகுதி ஒன்றிணைந்த அம்சங்களும் உள்ளன. ஆகவே உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்குத் திரும்பி வருவதற்கு, மீள்குடியேறுவதற்கு அல்லது உள்ளூரில் மீளிணைப்புப் பெறுவதற்கான விருப்புத்தெரிவுகளை உறுதிசெய்யும் விதத்தில் ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறை விதந்துரைக்கப்படுகின்றது. தீர்வுகள் பயனுறுதியுள்ளவையாகவும், நிலையானவையாகவும் இருக்கக்கூடியவகையில் இடம்பெயர்வு உருவாக்கும் குறித்துரைத்த தேவைகளும், பலவீனங்களும் கையாளப்படுதல் வேண்டும். ஆயினும், காரண அடிப்படையிலான அளவுகோல்களே இடம்பெயர்வுக்கு முடிவுகட்டுவதில் எப்பொழுதும் ஒரு முக்கிய காரணியாக இருக்குமென்பதை அங்கீகரித்தல் வேண்டும்.

**2006 ஆம் ஆண்டளவில் இடம்பெயர்வுக்கு முடிவுகட்டலாம் என்று ஒரு நம்பிக்கைவாத இலக்கு உள்ளது.**

## பகுதி 2

# இலங்கையின் திரும்பிவருதல், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான குறித்துரைத்த பிரச்சினைகள்

## நடவடிக்கைக்கான அழைப்பு

### தடுப்பு

உள்நாட்டில் இடம்பெயர்வுக்குத் தீர்வுகாண்பதற்கான மிகவும் பயனுறுதியுள்ள வழி மக்களைச் சுயவிருப்பமின்றி வீடுகளைவிட்டு செல்வதற்குப் பலவந்தப்படுத்தும் சூழ்நிலைகளைத் தடுப்பதாகும். மக்களைத் தன்னிச்சையாக இடம்பெயரவைப்பதிலிருந்து பாதுகாப்புப் பெறுவது ஓர் அடிப்படையான மனித உரிமையாகும். சகல வழிகளிலும் இடம்பெயர்வு தடுக்கப்படுவதோடு, இதைச் சாதிப்பதற்கு சகல வழிமுறைகளும் பயன்படுத்தப்படவேண்டும். இலங்கையின் 20 வருடகால யுத்தத்தின்போது எந்த முகவர் நிலையமோ, அமைப்போ இடம்பெயர்வைத் தடுக்க முடியாமலிருந்தது அவலகரமானதாகும். கற்றுக்கொள்வதற்கு நிறையப் பாடயங்கள் இருந்தன. இப்பொழுதும் நேரகால எச்சரிக்கை வழிமுறையமைப்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தற்போதுள்ள மற்றும் அபிவிருத்தியடையும் சூழ்நிலைகள் குறித்து தகவல் திரட்டுதல் அவசியமானதாகும். இலங்கையில் இது மக்கட்தொகைப் பரம்பல் சம்பந்தமான விடயமாகவிருப்பதால் இது அரசியல் தார்ப்பரியங்கள் கொண்டதாகும். உண்மையில் அனுசரணையோடு கூடிய குடியேற்றங்கள் குறித்துச் சில சான்றுகள் உள்ளன. உத்தேச இடைக்கால நிர்வாகமும், ஏனைய ஏற்பாடுகளும் தமது சொந்தச் சிக்கல் தன்மைகளைக் கொண்டிருக்கும். இவை நிச்சயமாக திரும்பிவருவோரின் பாதுகாப்பின் மீதும், மேலும் இடம்பெயர்வுகளை தடுப்பதன்மீதும் தாக்கங்களைச் செலுத்தும். நிர்வாக அலகு மற்றும் அதன் அதிகாரங்கள் குறித்துத் தீர்மானித்தவுடன் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் குறித்த மத்திய மற்றும் பிராந்திய அணுகுமுறைகளைக் கூட்டிணைப்பு மற்றும் ஒன்றிணைப்புச் செய்யும் பிரத்தியேக சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும்.

இடம்பெயர்வு தவிர்க்க முடியாததாயின், அது தற்காலிகமானதாக இருக்க வேண்டும். அவசியமான காலப்பகுதிக்கு மேல் அது நீடிக்கக்கூடாது. இதன் கருத்து இடம்பெயர்வுக்கான தீர்வுகள் இயன்றளவு விரைவில் ஆய்வு செய்யப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதாகும். இடம்பெயர்வு நெருக்கடிகள் தடுக்க முடியாதவாறு பாதுகாப்பு வழங்கத் தவறுவதில் இருந்தே எழுகின்றன.

முரண்பாட்டுத் தடுப்பு காரணங்களுக்கான கவனத்தை, பிரத்தியேகமாக ஒப்புரவின்மை மற்றும் அரிதான மூலவளங்களுக்கான போட்டி என்பவற்றுக்கான கவனத்தைக் கோரி நிற்கின்றது.

## நடவடிக்கைக்கான அழைப்பு

1. இடம்பெயர்வுக்கான இடர்வரவை ஜனசமூகங்கள், அதிகாரிகள் மற்றும் அமைப்புகளுக்கு உடனடியாக எடுத்துரைக்கும் நேரகால எச்சரிக்கை முறைமைகளை ஏற்படுத்துதல்.
2. இடம்பெயர்வுக்குச் சாத்தியமான மாற்றீடுகளை இனம்காணும் வகையில் உள்ளூர் மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்துதல். தேசீய அதிகாரிகளைவிட அவர்களுக்கு விருப்புத்தெரிவுகள் குறித்த கூடுதலான அறிவுண்டு. தீர்மானம் மேற்கொள்வதில் தாமும் பங்குகொண்டோம் என்ற உணர்வு மக்களுக்கு இருத்தல் வேண்டும்.
3. பகுப்பாய்வுகள், ஆய்வுகள் மற்றும் ஜனசமூகத் தலைவர்களுடனும், ஏனைய அதிகாரிகளுடனும் கலந்துரையாடல்கள் என்பவை மூலமாக இடம்பெயர்வுக்கான மாற்றுவழிகளைத் தேடுதல்.
4. இடர்வரவை எதிர்நோக்கும் மக்களிடையே விசேடத் தேவைகள் உள்ள குழுக்களை இனங்காணுதல்
5. ஜனசமூகங்கள் இடம்பெயர்வு இடர்வரவை எதிர்நோக்கினால், கொடையாளர்கள், அதிகாரிகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் அவர்கள் சார்பில் ஆதரவுப் பிரசாரம் மேற்கொள்ளல்.
6. இடம்பெயர்ந்த ஜனசமூகங்களுக்கும், இடம்பெயர்வைத் தடுக்கக்கூடிய தேசீய மற்றும் உள்ளூர் அதிகாரசபைகளுக்குமிடையில் தொடர்பாடல் வழிமுறைகளை ஏற்படுத்துதல்.
7. இடம்பெயர்வு அச்சுறுத்தலை எதிர்நோக்கும் ஜனசமூகங்களில் இடம்பெயர்வு இடர்வரைவைக் குறைக்கும் விதத்தில் தமது பிரசன்னத்தை ஏற்படுத்துதல்.
8. தடுப்பதற்கான ஒரேயொரு வலுவான, நிலையான அடிப்படை நல்லாட்சி முறை என்பதை அங்கீகரித்தல். குடிமக்களின் நீதி மற்றும் பொதுவான நலன்களின் தேவைகளுக்கு இணக்கமாகச் செயற்படும் ஒரு நல்லாட்சிமுறை இடம்பெயர்வு நெருக்கடிகளுக்கு எதிரான மிகச் சிறந்த பாதுகாப்பை வழங்கும்.
9. தன்னிச்சையான முறையில் இடம்பெயரச் செய்வதற்கு எதிரான சட்டரீதியான உரிமையைத் தெளிவாக எடுத்துரைப்பதன் மூலம் இடம்பெயர்வைத் தடுப்பதற்கான சட்ட அடிப்படையை வலுப்படுத்துல். இந்த ஏற்பாடு ஏற்கனவே சர்வதேச சட்டத்தில் உட்கிடையாகத் தெரிவிக்கப்பட்ட விடயங்களை வெளிப்படையாக்குவதோடு, பாதுகாப்பையும் வழங்கி, இடம்பெயர்வைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கான அடிப்படையையும் வழங்குகிறது.
10. சிறுபான்மையினர், விவசாயிகள், விசேடமான முறையில் காணிகளில் தங்கியிருப்போரும், அவற்றோடு இணைப்புற்றோருமான ஏனைய குழுக்கள் இடம்பெயர்விலிருந்து பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்தல்.
11. மீண்டும் மீண்டும் இடம்பெயர்வுகள் ஏற்படாது தடுப்பதற்கு மத்தியஸ்தம் மற்றும் மீளிணக்க முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

## பாதுகாப்பு

பாதுகாப்பென்பது அடிப்படை மனித உரிமைகளை ஈட்டிக்கொள்வதாகும். இவை சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை உள்ளடக்குகின்றன. பாதுகாப்பு சம்பந்தமான பிரதான பொறுப்பு அரசுகளையும், அவற்றின் அரசாங்கங்களையும் சார்ந்ததாகும். உள்நாட்டில் இடம்பெயர்வு குறித்த வழிகாட்டல் கோட்பாடுகள் ஒரு சர்வதேச உடன்படிக்கை போன்ற பிணிக்கும் சாதனமாக இல்லாவிடினும், அவை பிணிக்கும் தன்மை கொண்ட தற்போதுள்ள மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டவையும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் பாதுகாப்பு சம்பந்தமான முதலாவது அதிகாரபூர்வமான அறிக்கையுமாகும். இந்தக் கோட்பாடுகள் அரசு அல்லாத செயற்பாட்டாளர்களுக்கும் பொருந்தும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

மீள்வருகை மற்றும் குடியேற்றத்தின்போது தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் கௌரவத்துடனும், சுயமரியாதையுடனும் திரும்பிவருதல் போன்ற பல பாதுகாப்புப் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இந்த விடயத்துக்கு இதுவரை போதிய அழுத்தம் கொடுக்கப்படவில்லை. பாதுகாப்பை உறுதிப்படுத்தினால் மாத்திரமே கௌரவத்தையும் உறுதிப்படுத்த முடியும். திரும்பிவருபவர்கள் தம்மைத் தேசத்தின் பிரஜைகளாக மதித்து, ஏனையோர் அனுபவிக்கும் உரிமைகள் மற்றும் சலுகைகளை அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். திரும்பிவருவோரில் அனேகமானோர் சுய விருப்பத்தின் பேரிலேயே வந்துள்ளனர். ஆயினும், அவர்களுக்கு அறிவுசார் விருப்புத்தெரிவுகள் வழங்கப்பட்டனவா என்பது குறித்து நிச்சயமாகத் தெரியவில்லை. திரும்பிவருதல் குறித்த திட்டமிடல் மற்றும் முகாமைத்துக் கட்டங்களின்போது அவர்களுடன் கலந்தாலோசித்து, திரும்பிச் செல்லும் பிரதேசங்களில் உள்ள சூழ்நிலை குறித்து அவர்களுக்குத் தகவல் வழங்கப்பட வேண்டும்.

ஆட்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் நிலக்கண்ணிவெடிகளும், வெடிக்காத பொருட்களும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு

பிரத்தியேகமான அச்சுறுத்தலை விடுக்கின்றன. இவற்றை அழித்தொழிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட நிலக்கண்ணிவெடிப் பிரதேசங்கள் குறியிடப்படுகின்றன. ஆயினும் பிரதேசங்களைச் சரியாகக் குறியீடு செய்யத் தவறுதல் போன்ற பிரச்சினைகள் மீண்டும் மீண்டும் எழுந்துள்ளன. பிரத்தியேகமாக A9 வீதிக்கு இருபுறங்களிலும், தொலைவான இடங்களிலும், உள்ளகப் பிரதேசங்களிலும் இக்குறியீடுகள் இல்லாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மீள்குடியேற்றம் இடம்பெறுவதற்கு முன்னராகக் கண்ணிவெடியகற்றல் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளும் பிணக்குகள் ஒரு பிரச்சினையாக எழுந்துள்ளன. இப்பிரச்சினைக்கான பரிமாணம் பாரியதாகவும், அதன்

தார்ப்பரியங்கள் அதைவிடப் பாரியதாகவும் உள்ளபோதிலும், நிதியளிப்பு ஒரு வரையறையான காலப்பகுதிக்கே கிடைக்கக்கூடியதாகவுள்ளதுபோலத் தோன்றுகின்றது. பாடசாலைகளுக்கும், பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கும் மக்கள் செல்வது ஓர் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையாகும். இச்செயல்முறையை விரைவுபடுத்தும் வகையில் அரசாங்கமும், சர்வதேச நிறுவனங்களும் கண்ணிவெடியகற்றுவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், பொறிகள் மூலம் கண்ணிவெடிகளை அகற்றும் இயலுமையை அதிகரிப்பதற்கும் மேலதிக நிதியளிப்பைத் தேடுகின்றன.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுள் பெரும்பான்மையினராக விளங்கும் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்புத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு விசேட கவனம் தேவைப்படுகின்றது. அவ்வாறே, அங்கவீனர்கள் மற்றும் முதியோர்களின் தேவைகளுக்கும் பாதுகாப்பு அவசியமாகும்.

பாரபட்சமின்மைக்கான அனைத்துமடங்கும் அர்ப்பணிப்புணர்வின் ஒரு பகுதியாக இனத்துவ, மத அல்லது மொழிக்குழுக்களைச் சேர்ந்த மக்கள் திரும்பிவரும்போது அவர்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்படல் வேண்டும்.

## நடவடிக்கைக்கான அழைப்பு

1 உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு அவர்களின் உரிமைகள் குறித்துத் தகவல் வழங்குதல். இத்தகைய தகவல்களை வழங்குதல் பல்வேறு முறைகளில் செய்யப்படலாம்.

2 தேசிய மற்றும் சமாதானப் படைகள் உள்ளிட்ட இராணுவ ஆளணியினருக்கு பாதுகாப்புக் கோட்பாடுகள் சம்பந்தமான பயிற்சியை வழங்குதல்.

3 மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக அறிக்கையிடவும், ஆவணப்படுத்தவுமென ஒரு கண்காணிப்பு முறைமையை ஏற்படுத்துதல்.

4 சகல மட்டங்களிலும் நிலக்கண்ணிவெடிகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

5 நிலக்கண்ணிவெடிகளையும் மற்றும் வெடிக்காத பொருட்களையும் அகற்றுவதற்கான நிதியளிப்பைத் தேடுவதற்கும், அதிகரிப்பதற்குமான முயற்சிகளை மேற்கொள்ளல்.

6 ஒட்டாவா உடன்படிக்கை எதிர்காலத்தில் கண்ணிவெடியகற்றுதல் குறித்த நிதியளிப்போடு இணைப்புற்றிருப்பதால், அதில் கையெழுத்திடுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தல்.

7 கண்ணிவெடிகளை விதைப்பது சம்பந்தமாக அரசாங்கத்துடன் ஒரு தனியான ஒப்பந்தத்தை செய்துகொள்ளுமாறு எல்ரீரீஈ அமைப்பை ஊக்குவித்தல். இது இறுதிச் சமாதான உடன்படிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படலாம்.

8 அகதிகள் மீண்டுவரும் அல்லது மீள்குடியேறும் பிரதேசங்களில் மனித உரிமை நிலைமைகளை கண்காணிப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். அவசியம் ஏற்படின் சர்வதேச நிபுணர்களையும் அழைத்தல்.

9. அச்சுறுத்தப்படும் சிறுபான்மையினக் குழுக்கள் நடத்தப்படும் விதத்தைக் கண்காணிப்புச் செய்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை கோருவதற்குத் தேசீய அதிகார சபைகள் விடயத்தில் தலையீடு செய்தல்.

10. பாதுகாப்பை உதவி மற்றும் அபிவிருத்தியோடு ஒன்றிணைக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தல்.

11. மேலும் சிறந்த பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் சம்பந்தப்பட்ட மக்களுக்கு அவசியமான நடவடிக்கைகளில் பயிற்சி அளித்தல்.

12. பயிற்சி மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் பால்நிலைக் குறித்துரைப்பு வன்செயல்களுக்குக் கவனம் வழங்கப்படுவதை ஒன்றிணைத்தல்.

## காணி

இந்த விடயம் ஒவ்வொரு கலந்தாலோசனைக் கூட்டத்திலும் எழுப்பப்பட்ட ஒன்றாகும். காணிச்சொத்துவம், காணியுடைமை, உயர்பாதுகாப்பு வலயங்கள் மற்றும் இழப்பீடு என்பவை பாரிய பிரச்சினைகளாகும். இடம்பெயர்ந்தோர் பலர் தமது ஆரம்பகால வாழ்விடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கான விருப்பத்தை வெளியிட்ட போதிலும், பல சந்தர்ப்பங்களில் காணிப்பிரச்சினை காரணமாக அவர்களால் திரும்பிச் செல்ல முடியவில்லை. உதாரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் சில பிரதேசங்களின் மக்கள் திரும்பிச் செல்வதைத் தடுத்துள்ளது. இவ்விடங்களில் முன்பு வாழ்ந்த சுமார் 70,000 பேர் திரும்பிச்செல்ல முடியாத நிலையுள்ளது.

ஆரம்ப காலங்களில் இந்த வலயங்களில் வாழ்ந்தோர் யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளுக்குச் சென்று உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஏனையோர் கைவிட்டுச் சென்ற வீடுகளில் குடியேறினர். இந்த வீடுகளின் ஆரம்பகால சொந்தக்காரர்கள் திரும்பிவரமுடியாத நிலை உள்ளதால் இது மேலும் பல பிரச்சினைகளுக்கு இட்டுச் சென்றுள்ளது. இதன் விளைவாக சட்ட நிலைத்தகவு கேள்விக்குள்ளாகியிருப்பதோடு பகைமையுடன் நடத்தப்படுதல் மற்றும் வேதனையை ஏற்படுத்தும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வீடுகள் பூரணமாக சேதமடைந்திருந்தால் அல்லது அரசாங்கத்தினால் காணி சுவீகரிக்கப்பட்டிருந்தால் நட்டஈடு வழங்குவது சம்பந்தமான பிரச்சினையும் உள்ளது. நிலமற்ற இடம்பெயர்ந்த நபர்கள் சம்பந்தமான வேறொரு பிரச்சினையும் உள்ளது. அவர்கள் எங்கே செல்வது?

## நடவடிக்கைக்கான அழைப்பு

1. இறுதிச்சமாதான உடன்படிக்கையில் காணி, வீடமைப்பு மற்றும் சொத்துப் பிரச்சினைகளுக்கு நேரடியாகத் தீர்வு காணுதல்.

2. காணி, வீடு மற்றும் சொத்துக்கள் சம்பந்தமான சட்டரீதியான அல்லது ஏனைய பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஒரு பிரச்சினை தீர்க்கும் நிறுவனமாகப் பயன்படுத்துவதற்கு காணி, வீடு மற்றும் சொத்துரிமைகள் சம்பந்தமான ஒரு விசேட ஆவணக்குழுவை நிறுவுதல். இதில் தீர்க்கப்படமுடியாத பிணக்குகளை ஒரு தீர்மானம் மேற்கொள்ளும் நியாயசபைக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும்

3. சட்டவாக்க மற்றும் கொள்கைச் சீர்த்திருத்தங்கள் தொகுதியொன்றை வகுத்தமைத்தல்.

4. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் சொத்துரிமை களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துதல். பிரத்தியேகமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் திரும்பிவரும்போது அவர்களின் காணி மற்றும் சொத்துக்கள் சம்பந்தமான உரிமைக்கோரிக்கைகளைத் தீர்மானிக்க உதவும் வகையில் அவர்கள் சட்ட மற்றும் இயைபுள்ள ஆவணங்கள் குறித்து விளங்கிக்கொள்ளும் வகையிலான உதவிகள் வழங்கப்படல் வேண்டும். உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தமது சொத்துக்கள் குறித்து மீண்டும் உரிமை கோருவதற்கு, அவசியப்படின் அவர்கள் சட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

## ஆவணப்படுத்தல்

உயிர்களைக் காப்பாற்றுவதற்காகத் தப்பியோடுகையில் முக்கியமான ஆவணங்களை இழந்துவிடுதல் அல்லது விட்டுச்செல்லுதல் பொதுவாகவே இடம்பெறும் ஒரு விடயமாகும். தனிப்பட்ட அடையாளம், பிறப்பு, திருமண மற்றும் மரணச் சான்றிதழ்கள், காணிச் சொத்துவம் குறித்த உறுதிகள் என்பவை தொலைந்த ஆவணங்களில் சிலவாகும். இவற்றை எவ்வாறு விரைவாகப் பெற்றுக்கொள்வது, மற்றும் யார் இவற்றை வழங்குவதற்குப் பொறுப்பானவர்கள் என்பவற்றைத் தெளிவாக அறிந்துகொள்வது முக்கியமானதாகும். கிராமமட்டத்தில் கிராமசேவகர் இதற்குப் பொறுப்பாகவிருப்பதுபோலத் தோன்றுகின்றது. ஆயினும் இப்பொழுது கிராமிய புனர்வாழ்வுக் குழுக்களும் இக்கருமங்களை ஆற்றுகின்றன.

தமிழ் நாட்டிலிருந்து திரும்பிவந்தோர் இந்தியாவில் பிறந்த தமது பிள்ளைகளின் பிறப்புக்களைப் பதிவுசெய்யும் விடயத்தில் பல ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால், அதிகரித்த கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். சிறுவர்கள் பாடசாலை வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பிறப்புச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அரசாங்கத் திணைக்களங்களுடனான சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் தேசீய அடையாள அட்டை அவசியமாகும்.

### நடவடிக்கைக்கான அழைப்பு

1. எந்த அரசாங்க அலுவலகம் அல்லது அலுவலகங்கள், பொறுப்பானவையென்பதைத் தெளிவுபடுத்துதல்.

2. பிறப்புச் சான்றிதழ்கள் அல்லது சொத்து உரித்துறுதிகள் போன்ற தொலைந்த ஆவணங்களை மீண்டும் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆதரவு வழங்குதல்.

3. இந்தியாவிலிருந்து திரும்பிவருவோருக்கான ஆவணப்படுத்தல் செயல்முறைகளை இலகுநிலைப்படுத்தல்.

4. ஆவணப்படுத்தல் செயல்முறையை விரைவுபடுத்தும் வகையில் அகதிகள் திரும்பிவரும் பிரதேசங்களில் இடம்பெயர் பதிவு அலகுகளை ஏற்பாடு செய்தல்.

## அடிப்படைக் காரணங்களுக்குத் தீர்வு காண்பதற்கான கொள்கைச் சிந்தனைகள்.

போர்நிறுத்தமொன்று நடைமுறையிலிருந்தாலும், சமாதான ஏற்பாட்டுக்கான திட்டங்கள் செயற்பட்டபோதிலும், முரண்பாட்டுக்கும் இடம்பெயர்வுக்குமான அடிப்படைக் காரணங்களை இனங்கண்டு, அவற்றுக்குத் தீர்வுகாணப்படுதல் வேண்டும். இது விடயத்தில் சமாதான உடன்படிக்கைகள், ஜனநாயகத் தேர்தல்கள், சட்டமுறைமைச் சீர்திருத்தங்கள், சிறுபான்மையினர் உரிமைகள், மொழிப்பிரச்சினைகள், பொதுமன்னிப்புகள், சமூக பொருளாதார நிலைமைகள், மனித உரிமைகளுக்கான மதிப்பு, சொத்துகளை மீளப்பெறுதல், தொழில்வாய்ப்புகள் மற்றும் அடிப்படை வாழ்க்கைத் தரங்களை ஈட்டிக்கொள்ளுதல் போன்ற பொதுவான மற்றும் குறித்துரைப்பான விடயங்களில் கவனம் செலுத்துவது அவசியமாகும். கடந்த காலத் தவறுகளை அறிந்துகொண்டு, எதிர்காலச் சவால்களுக்கும் முகம்கொடுக்கும் வகையில் தீர்வுகளின் சூழமைவில் பாதுகாப்பை வழங்கி, தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலை மற்றும் பீதி என்பவற்றை ஒழிக்க வேண்டிய அவசியமுள்ளது.

### நடவடிக்கைக்கான அழைப்பு

1 முரண்பாட்டுக்குப் பிந்திய அரசியல் மற்றும் பொருளாதாரத் தீர்வுகளில் பாரபட்சமின்மையை உறுதிசெய்தல்.

2. நீதியான, சுதந்திரமான தேர்தல்களை நடத்துதல்.

3. நீதிபதிகளுக்கான துரித பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர் மற்றும் ஏனைய மனித உரிமைகள் பாதுகாப்பு உத்தியோகத்தர் என்போர் உட்பட, சுயாதீனமான ஒரு நீதித்துறைக்கு ஆதரவு வழங்குதல்.

4. சுயாதீனமான ஊடகத் துறையை உத்தரவாதம் செய்தல்.

5. தேசிய, இனத்துவ, மத அல்லது மொழிச் சிறுபான்மையினர் குறித்த முதலாவது சர்வதேச சாதனமாகிய இது விடயத்திலான ஐ.நா பிரகடனத்தின் பிரகாரம் சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்த நபர்களின் உரிமைகளுக்கு விசேட கவனஞ்செலுத்துதல். "பாதிக்கப்பட்ட மக்களின் இனத்துவ மத அல்லது ஜாதி உள்ளடக்க நிலையை மாற்றும் நோக்கத்தை மற்றும் / அல்லது விளைவைக் கொண்ட நடவடிக்கைகளின் அடிப்படையிலான இடம்பெயர்வுகளைத் தடைசெய்யும் உள்நாட்டில் இடம்பெயர்வு குறித்த வழிகாட்டல் கோட்பாடுகளும் இது விடயத்தில் கவனத்தில் கொள்ளப்படுவது முக்கியமானதாகும்.

6. இராணுவத்தினரும், பொலீசாரும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதை ஊக்குவித்தல்.

7. இடம்பெயர்வை ஏற்படுத்தும் சமூகக் குழப்பங்கள் ஏற்படாது தடுக்கும் வகையில் கிராமிய மக்கள் மட்டங்களில் சிவில் சமூகத்தைப் பலப்படுத்துதல்.

8. சிவில் சமூகத்தை ஈடுபடுத்திப் பலப்படுத்தும்வகையில் அரசாங்கம் ஒரு பங்கேற்பு அணுகுமுறையை ஊக்குவித்தல். அரசாங்கம் மூலவளங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் விநியோகம் செய்வதில் வகைப்பொறுப்பு மற்றும் ஒளிவுமறைவின்மையை வெளிப்படுத்துவதோடு, பிணக்குத் தீர்வு மற்றும் முரண்பாட்டு முகாமைத்துவம் என்பவற்றுக்கான சட்ட மற்றும் அரசியல் சட்டகங்களை வழங்குதல் வேண்டும். பிரத்தியேகமாக, இடம்பெயர்ந்த மக்கள் மீளிணைப்புப் பெறும் அதேவளையில் தேசிய நல்லிணக்கமும் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

## சூழல்

யுத்தம் தண்ணீர், தாவரங்கள், வனப்போர்வை மற்றும் காணி சம்பந்தமான வலுவான தாக்கத்தைக் கொண்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் நீர்ப்பாசனத் திட்டங்கள் முன்னணிப் பாதுகாப்பு நிலைகள், பதுங்கு குழிகள் காரணமாக மாற்றமுற்றுள்ளன. ஜனசமூகங்களுக்கும், ஜீவனோபாயங்களுக்கும் ஆதரவளிப்பதில் சூழலின் பாத்திரத்துக்கும் கவனமளிப்பது அவசியமாகின்றது. பயிர் செய்யப்படாத காணிகளில் அதிசிறப்பான உற்பத்தித் தகவை ஈட்டிக்கொள்வதாயின் நீண்ட தவணைப் பருவகாலப் பயிர்ச்செய்கைள் அவசியப்படும்.

## நடவடிக்கைக்கான அழைப்பு

1. மீள்வருகை, மீள்குடியேற்றப் பிரதேசங்கள் உட்பட, சூழல் தாக்க ஆய்வுகளை நடத்துதல்.

2. காணிகளை மீட்டெடுப்பதற்கும், மக்கள் திரும்பிவரும் செயல்முறை காரணமாகச் சூழலுக்கு விளையக்கூடிய சேதங்களை அதிகுறைவாக்குவதற்குமான வழிவகைகளை ஆராய்தல்.

## மனிதாபிமான உதவி

உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் சிலர் பல்வேறு காரணங்களின் நிமித்தம் மீண்டும் தமது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவருவதற்கு விருப்பமின்றியிருப்பது தெரியவந்துள்ளது. அவர்கள் தமது புதிய இடங்களில் தங்கிவாழ்வதோடு, தாம் பாதுகாப்பை உணரும் இச்சூழலில் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்த்துள்ளனர். இவர்களுள் அனேகமானோர் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் பண உதவிகளில் தங்கியுள்ளனர். இடம்பெயர்வுகளின் காரணமாக பலரின் சமூக விழுமியங்கள் மாறியுள்ளதாகத் தோன்றுகின்றது. ஏனைய விடயங்களிலும் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. விவசாய மற்றும் மீனவச் சமூகங்களைச் சேர்ந்த மக்களைப்போலவே, பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் திரும்பிச் செல்லும் விடயத்தைப் பல்வேறு கண்ணோட்டங்களில் நோக்குகின்றனர். இப்பல்வேறு கருத்துணர்வுகளையும் பிரதிபலிக்கும் வகையிலான தீர்வுகள் வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

இடம்பெயர்ந்தோர் திரும்பிவருகையில் அல்லது மீள்குடியேறுகையில் அவர்கள் மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். தேசீய அதிகாரிகள் அத்தகைய உதவிகளை வழங்குவதற்கான கடமையையும், பொறுப்பையும் கொண்டுள்ளனர். அதேவேளையில் எல்ரீரீஈ அமைப்பு அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள சிவிலியன் மக்கள் குறித்த பொறுப்பைக் கொண்டுள்ளது. இருதரப்பினரும் பாரபட்சமற்ற மனிதாபிமானப் கோட்பாடுகளின் பிரகாரம் உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அவர்கள் உதவிசெய்ய விரும்பாவிடில், இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளும் இயலுமை மற்றும் விருப்பத்தைக் கொண்ட ஏனைய அமைப்புகள் அவ்வாறு செய்வதற்கு இடமளிக்க வேண்டும். (மேலதிக தகவல்களுக்கு, கீழே கூட்டிணைப்புச் சம்பந்தமான பகுதியைப் பார்க்கவும்).

### நடவடிக்கைக்கான அழைப்பு

1. இடம்பெயர்ந்த சிலர் சொந்த இடங்களுக்குத் திரும்பிவருகையில், ஏனையோர் புதிய இடங்களில் குடியேறக் கூடுமென்பதை அங்கீகரித்தல்.

2. சாத்தியவள மீள்வருகை மற்றும் மீள்குடியேற்றப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து சுயாதீனமாக மீள்வருகை நிலைமைகளை மதிப்பீடு செய்தல்.

3. இடம்பெயர்ந்த ஜனசமூகத்தின் துடிப்பான பங்கேற்போடு, அவர்கள் சுய – கௌரவத்தோடு தமது வீடுகளுக்கும், மீள்குடியேற்றப் பிரதேசங்களுக்கும் செல்லக்கூடிய வகையில் பிரயாண வசதிகளை ஒழுங்குசெய்தல்.

4. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் இடைத்தங்கல் காலத்தில் அவர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிசெய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தல்.

5. இடம்பெயர்ந்த மக்கட்தொகையினர் திரும்பிவரும்போதும், மீள்குடியேறும்போதும் அவர்களுக்கும், அவர்களின் பிரதேசத்திலுள்ள ஏனைய ஜனசமூகங்களுக்கும் பாகுபாடற்ற முறையில் மனிதாபிமான உதவிகள் கிட்டுவதை உறுதிசெய்தல்.

6. கொடையாளர், அரசாங்கங்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் ஏனைய செயற்பாட்டாளர்களிடையே மனிதாபிமானச் செயற்பாடுகள் சம்பந்தமான ஒழுக்காற்று விதிகளை வற்புறுத்தி, அவற்றை ஏற்படுத்துதல்.

7. மனிதாபிமான உதவிக் கொள்கைகளில் நிலைமாறாமை மற்றும் ஒரு சீரான தன்மை என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் கொடையாளர்களுடன் ஒழுங்கான கலந்தாலோசனைக் கூட்டங்களை நடத்துதல்.

## பெண்களும், சிறுவர்களும்

யுத்தத்தினால் அதிகம் பாதிப்புற்றோர் பெண்களும், சிறுவர்களுமேயாவர். அவர்களுக்கு விசேடமான ஏற்பாடுகள் செய்யப்படுமென்று வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளபோதிலும், இது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. தற்போதைய கலாசாரச் சூழமைவில் விதவைகளும், பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களும் அப்பட்டமாகவே ஒரங்கட்டப்படுகின்றனர். விசேட ஏற்பாடுகள் இலலையெனில், அவர்களின் துன்பங்கள் மேலும் தொடரும் நிலையே ஏற்படும். பெண்களுக்கான சமூக, பொருளாதர வாய்ப்புக்கள் இல்லாமை காரணமாகவும், பெண்களுக்கெதிரான பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் காரணமாகவும் இடம்பெயர்வு மற்றும் மீள்வருகைச் சூழமைவில் பெண்கள் தனித்தன்மை வாய்ந்த சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

பெண்களும் தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையில் ஒரு பகுதியாகுதல் வேண்டும். பெண்களினதும், அவர்களின் பிள்ளைகளினதும் பாதுகாப்புத் தேவைகள் சம்பந்தமான விசேட கவனம் அவசியப்படுகின்றது.

சிறுவர்களைப் படைகளில் சேர்ப்பது முற்றாக நின்றுவிடாதபோதிலும், வலது குறைந்த போராளிகளின் புனர்வாழ்வு ஆரம்பித்துள்ளது. இது சிறுவர்களைப் பாதுகாப்பது சம்பந்தமான தீவிரமான சவால்கள் குறித்த விடயமாகும். மேலும் சிறுவர்கள் பாடசாலைகள் மற்றும் கல்வி வசதிகள் இல்லாமை, அல்லூட்டம், பாலியல் மற்றும் வர்த்தக ரீதியிலான சுரண்டல் என்பவற்றினாலும் பெரிதும் பாதிப்புறுகின்றனர். இவற்றினால் இவர்களுக்குக் குழந்தைப் பருவமும், சிறுவர் உரிமைகளும் இல்லாமற்

போகின்றன. உண்மையில், பல சிறுவர்கள் அறவே பாடசாலைக்குச் செல்லாத நிலையும், பலர் புத்தகங்கள், சீருடைகள் மற்றும் பாடசாலைப் பொருட்களை வாங்கமுடியாத காரணத்தால் இடையில் கல்வியை நிறுத்திவிடும் நிலையும் உள்ளது. சில சிறுவர்கள் தமது குடும்பங்களுக்கு உதவிசெய்வதற்காக வேலைக்குச் செல்வதால் பாடசாலைகளிலிருந்து விலகியுள்ளனர். போக்குவரத்துக் கஷ்டங்கள் மற்றும் பாதுகாப்புக் கெடுபிடிகளும் சிறுவர்களின் கல்விநிலையைப் பாதிக்கும் ஏனைய காரணிகளாகும். சிறுவர்களை மீண்டும் பாடசாலைகளில் சேர்ப்பது ஒரு முன்னுரிமை விடயமாக்கப்படுதல் வேண்டும்.

## நடவடிக்கைக்கான அழைப்பு

1 மீள்வருகை மற்றும் மீள்குடியேற்றப் பிரதேசங்களில் பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களை ஜனசமூகங்களுடன் மீளிணைப்பதற்கு உதவும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தல்.

2. பெண்கள் தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையின் ஒரு பகுதியாக மாறித் தமது சொந்த அபிவிருத்தி குறித்த தீர்மானங்களை மேற்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கிராமிய புனர்வாழ்வுக் குழுக்களில் பெண்களை ஈடுபடுத்துதல்.

3. பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை சம்பந்தமான விடய நிகழ்வுகளைக் கண்காணித்து, ஆவணப்படுத்துதல்.

4. பெண்களின் உரிமைகள் சம்பந்தமான தகவல்களைப் பரப்புவதும், பாலியல் மற்றம் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்குப் பலியாகியோரின் பிரச்சினைகளைக் கையாளுவதற்கான கட்டமைப்புக்களை ஏற்படுத்துவதும்.

5. குடும்பங்கள் ஒன்றாக வாழ்வதற்கு உதவும் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தல்.

6. இடம்பெயர்ந்தோருக்கு குடும்ப அங்கத்தினர்கள் இருக்குமிடம் மற்றும் அவர்களின் சூழ்நிலை குறித்த தகவல்களை வழங்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆதரவளித்தல்.

7. இடம்பெயர்வின்போது பிரிந்துவிட்ட சிறுவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்குக் குடும்பங்களுக்கு உதவி செய்தல்.

8. அவசியமானவிடத்து, பயிற்சிபெற்ற சமூகப்பணியாளர்கள் மற்றும் ஏனைய கவனப் பணியாளர்கள் மூலமாகப் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் உளவியல் சமூக ஆதரவு மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.

9. சிறுவர்களை இயன்றவரையில் நிறுவனங்களில் சேர்க்காதிருத்தல். பெற்றோர் இருவரையும் இழந்துவிட்ட சிறுவர்கள் விடயத்தில் அவர்கள் உறவினர்களோடு சேர்ந்து வாழுதல் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

10. முன்னாள் போராளிச் சிறுவர்களின் புனர்வாழ்வைக் கண்காணித்தல். யுனிசெப் அமைப்புக்கும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கும் இச்செயல்முறையை முன்கொண்டு செல்வதற்குப் பணிப்பாணை வழங்கப்பட்டுள்ளதால் அவை இது குறித்து வகைப்பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

11. தவறிழைப்போர் மீது அழுத்தங்களைக் கொண்டுவரும் விதத்தில் வயதில் குறைந்தோர் படைகளில் சேர்க்கப்படுதல் குறித்து அதிகாரிகளுக்கு அறிவிப்பதோடு, இத்தகைய அபிவிருத்திகள் குறித்துக் கண்காணிப்புச் செய்தல்.

12. சிறுவர்களுக்குக் கல்வியை முன்னுரிமையாக்குதல். சிறுவர்களை மீண்டும் பாடசாலைகளில் சேர்ப்பது முன்னுரிமை விடயமாக்கப்படுதல் வேண்டும். அறிவில் மற்றவர்களை எட்டிப்பிடிக்க வைக்கும் வகுப்புகள் மற்றும் பாடசாலைக்கவசியமான பொருட்களை வழங்குதல், பாடசாலைகளுக்குத் திருத்த வேலைகள் என்பவற்றின் மூலம் அவர்களை மீண்டும் பாடசாலைகளில் சேர்க்கும் சகல முயற்சிகளும் துரிதப்படுத்தப்படல் வேண்டும்.

13. 2003 ஜுன் மாதத்தில் அரசாங்கத்துக்கும் எல்.ரீ.ரீ.ஈ அமைப்புக்கும் இடையில் உடன்பாடு காணப்பட்ட சிறுவர்களுக்கான நடவடிக்கைத் திட்டத்துக்குப் பரந்த அளவிலான ஆதரவை வழங்குதல். இத்திட்டம் ஆபத்தான வேலைகளில் ஈடுபட்டுள்ள சிறுவர்கள், வீதிச் சிறுவர்கள் மற்றும் போராளிச் சிறுவர்கள் உட்பட இலகுவில் பலியாகக் கூடிய சகல சிறுவர்களினதும் தேவைகளுக்கு தீர்வுகாண முயலுகின்றது.

## கூட்டிணைப்பு

இடம்பெயர்ந்தோர் சார்பில் எடுக்கப்படும் சகல முயற்சிகளும் மாவட்ட மட்டத்தில் கூட்டிணைப்புச் செய்யப்பட வேண்டுமென்பதில் நலன்பிரதிநிதிகளிடையே ஒருமித்த கருத்து நிலவியது. ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த மக்களுக்கு அவர்களுக்கேயுரிய விசேடமான தேவைகள் இருப்பதால் இது பயனுள்ளதென்று கருதப்பட்டது. சகல நலன்பிரதிநிதிகளினதும் முயற்சிகள் பயனுறுதி மற்றும் வினைத்திறன் மிக்கதாக அமையவேண்டுமெனில், அவை ஒன்றிணைக்கப்பட்டு, கூட்டிணைப்புச் செய்யப்படவேண்டியது அவசியமாகும். வகைப்பொறுப்பைப் பொறுத்தவரையிலும் இதுவே நிலைமையாகும். உதவி செய்ய விரும்புவோரின்

முயற்சிகள் உதவியைப் பெற்றுக்கொள்வோருக்கு வகைப்பொறுப்புள்ளதாக அமையவேண்டும். உதவிகள் தாக்கம் எந்த ஜனசமூகத்துக்கும் தீங்கிழைக்காத வகையில் உதவியைத் திட்டமிடுதல் வேண்டும். அகதிகள் சென்று வாழும் நிலையான சமூகத்தினுள் மீளிணைப்பு என்பது ஒரு திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்

இடம்பெயர்ந்தோர் திரும்பிவரும்போது, மீண்டும் வரும் அல்லது மீளக்குடியேறும் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் "ஜீவனோபாய உதவி" என்று அழைக்கப்படும். நிதியளிப்பு ஆதரவை ஒன்றிணைக்கப்பட்ட உதவித்திட்டத்தின் கீழ் (UAS) வழங்கும் அரசாங்கக் கொள்கையொன்று உள்ளது. 2003 பெப்ரவரி மாதத்தில் நடைமுறைக்கு வந்த தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் வழிகாட்டல்களின் கீழ் தகுதியுள்ள குடும்பங்கள் என்பது போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் தமது சட்டபூர்வமான சொந்தக் காணிகளுக்கு (அல்லது அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணிகளுக்கு) திரும்பிவந்து மீளக்குடியேறிய குடும்பங்களைக் குறிப்பதாகும். மேலும், உதவிக்குத் தகுதி பெறுவதற்கு ஒரு குடும்பத்தின் மாதாந்த வருமானம் 2500/-

ரூபாவுக்கு குறைவானதாயிருத்தல் வேண்டும். ஆயினும், இத்திட்டத்தின் கீழ் பலருக்கு இத்தகுதி கிட்டுவதில்லை. இடம்பெயர்ந்தோருக்கான உதவி ஒரே சீரான பாங்கைக் கொண்டிருக்கவில்லை. இது இடம்பெயர்ந்தோர் பலருக்குக் கணிசமான பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. இடம்பெயர்வு சம்பந்தமான காலத்தைத் தீர்மானித்த முறை ஒரு பிரச்சினையாகத் தோன்றுகின்றது. இடம்பெயர்ந்த சகலரும் ஒரே விதமான விளைவுகளை அனுபவித்துள்ளமையாலும், அவர்களில் எவரும் ஓரங்கட்டப்படக்கூடாது என்பதாலும் இது நியமப்படுத்தப்படுதல் வேண்டும்.

திரும்பிவருதல் என்பது ஒரு சிக்கலான செயல்முறையாகவிருப்பதால், அது பெருமளவு கவனத்துடன் திட்டமிடப்படுதல் வேண்டும். இது சம்பந்தமாக மேலே பல பிரச்சினைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்களின் மீள்வருகை அவர்களின் இடம்பெயர்வைப்போன்று மன அதிர்ச்சிகளை ஏற்படுத்தாத வகையில் அவர்கள் வந்துசேருவதற்கு முன்பாகவே கிராமியப் புனர்வாழ்வுத் திட்டங்களை வகுத்தமைக்க வேண்டும். இறுதியாக, தீர்வுகள் பயனுறுதியுள்ளவையாக அமைய வேண்டுமெனில் அவை நிலைபெறானவையாக இருத்தல் வேண்டும்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் திரும்பிவரும் விடயத்தில் ஊடகங்கள் பெருமளவு பங்காற்ற முடியும். அனேகமான சந்தர்ப்பங்களில் மீள்வருகையை மேலும் அசாத்தியமாக்கும் வகையில் ஆக்கபூர்வமற்ற தகவல்கள் ஊடகங்களினால் வழங்கப்படுகின்றன. இது விடயத்தில் அரசாங்கம் மற்றும் ஏனைய நலன்பிரதிநிதிகள் ஊடகங்களோடு ஆரோக்கியமான கலந்துரையாடல்களை மேற்கொள்வது மேலும் தீர்மானகரமான ஒரு விடயமாகும். அவர்கள் இலங்கையின் குடிமக்கள். ஏனைய குடிமக்கள் அனுபவிக்கும் உரிமைகளை அவர்களும் அனுபவித்தல் வேண்டும். இது விடயத்தில் ஊடகங்கள் ஓர் ஆக்கபூர்வமான பாத்திரத்தை வகிக்கலாம்.

## நடவடிக்கைக்கான அழைப்பு

1. திரும்பிவரும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கும், உள்ளுர் வாசிகளுக்குமிடையில் மத்தியஸ்தம் மற்றும் மீளிணக்க முயற்சிகளை அறிமுகம் செய்தல்.

2. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கும், மீள்வருகை அல்லது மீள்குடியேற்றப் பிரதேசங்களின் வதிவாளர்களுக்கும் இடையிலான ஜனசமூகங்களுக்கிடையிலான கலந்தாலோசனைக் கூட்டங்களை நடத்துவதன் மூலம் சாத்தியவள முரண்பாடுகளை இனங்கண்டு, களைவதற்கு உதவுதல்.

3. மாவட்ட மட்டத்தில் ஒரு கூட்டிணைப்பு அமைப்பை உருவாக்குதல். அரசாங்கம், அரசசார்பற்ற துறை, இராணுவம், கிராமியப் புனர்வாழ்வுக் குழுக்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் மற்றும் ஏனைய தொடர்புள்ள செயற்பாட்டாளர்கள் என்போர் இந்த அமைப்பில் பிரதிநிதித்துவம் பெறுதல் வேண்டும். இதனால் இச்செயல்முறை சம்பந்தமுள்ள அனைவருக்கும் உரிய ஒன்றாவதோடு, வகைப் பொறுப்புச் சம்பந்தமான வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன.

4. ஒன்றிணைக்கப்பட்ட உதவித்திட்டமாக இருந்தாலும் சரி, நட்டஈடாக இருந்தாலும் சரி, மக்கள் சமீபத்தில் இடம்பெயர்ந்திருந்தாலும் சரி, அல்லது நீண்ட காலத்துக்கு முன்பு இடம்பெயர்ந்திருந்தாலும் சரி, அவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் ஒரே சீரானவையாக இருத்தல் வேண்டும். உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் எல்லோருக்கும் உதவி குறித்த அளவுகோல்கள் மற்றும் தகுதி என்பவை குறித்து அறிவிக்க வேண்டும்.

5. பொதுமக்களுக்கு மீள்வருகை மற்றும் மீள்குடியேற்றம் குறித்த தகவல்கள் வழங்கும் வகையில் அரசாங்கம் மற்றும் ஏனைய அதிகாரிகள் ஊடகங்களில் நடத்தும் கிரமமான கலந்துரையாடல்களை முன்னேற்றுதல் வேண்டும்.

# பொருளாதாரமும் அபிவிருத்தியும்

நிலைபேறான தன்மையை ஈட்டிக்கொள்வதற்காக, அபிவிருத்தியினுள் நிவாரணத்தை ஒன்றிணைக்கும் வகையில் பெருமளவு பணிகள் மேலும் செய்யப்படவேண்டிய நிலையுள்ளது. ஒரு யுத்தப் பொருளாதாரத்திலிருந்து சமாதானப் பொருளதாரத்துக்கான நிலைமாற்றத்தின்போது பல வினாக்களுக்கு விடைகாண வேண்டியுள்ளது. வழமையான கட்டமைப்பு ரீதியான வறுமைக்கும், யுத்தத்தின் காரணமாக எழுந்துள்ள வறுமைக்கும் தீர்வுகளைக் காண்பது எவ்வாறு? அவை தனித்தன்மை வாய்ந்தவையா, அல்லது ஒன்றோடொன்று தொடர்புற்றவையா? வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான

ஏற்றத்தாழ்வுகள் மேலுமொரு பிரச்சினையாகும். அபிவிருத்தி சமாதானத்துக்கான முன்நிபந்தனையா? ஒன்றிணைந்த அணுகுமுறையொன்று சாத்தியமா? வருமானம் பிறப்பிக்கும் முயற்சிகள் சம்பந்தமாக சிந்திக்க வேண்டியிருப்பதோடு, அவை நீண்ட தவணை அபிவிருத்திக் கருத்திட்டங்களோடு இணைக்கப்படுவதும் அவசியமாகும்.

இடம்பெயர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்ற இடங்களிலும், வீடுகளுக்குத் திரும்பி வந்த பின்னரும் சுய – சார்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமெனில், அவர்கள் தமது பழைய திறன்களைப் பேணுவதோடு, புதிய திறன்களை அபிவிருத்தி செய்துகொள்ளவும் வேண்டும்.

மோதலுக்குப் பிந்திய வியாபாரம் என்பது துடிப்பான ஒன்றாகும். மோதலுக்குப் பிந்திய பிரதேசங்களில் பணியாற்றும் சர்வதேச முகவர் நிலையங்களுக்கிடையிலான போட்டிகள் தமது சொந்த இயக்கவியலைக் கொண்டுள்ளன. உள்ளூர் மக்களின் அறிவை ஓரங்கட்டுவதும், முரண்பாடுகளின் அரசியற் பரிமாணங்களைப் புரிந்து கொள்ளத் தவறுவதும் இத்தகைய போட்டிகளின் விளைவாக இடம்பெறுபவையாகும். இது எம்மை மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் இலங்கை மக்களுக்குப் பொறுப்புக்கூறுவது சம்பந்தமான பிரச்சினைக்கு இட்டுச் செல்கின்றது. உலகம் முழுவதிலும் உள்ள முரண்பாடுகள் தன்மையில் வேறுபட்டவை.

சகல மோதலுக்குப் பிந்திய நிலைமைகளையும் கையாள உதவும் அனைத்துமடங்கும் பிரதான திட்டமொன்று இல்லை. உள்ளூர் நிலைமைக்கான உணர்திறனைக் காட்டுவது அதிமுக்கியம் வாய்ந்த விடயமாகும். சர்வதேச முகவர் நிலையங்கள் தாம் பணியாற்றும் தேசத்தின் மக்களை விட, தமக்கு நிதியளிப்போருக்கே கூடுதலான வகைப்பொறுப்பைக் கொண்டவர்கள் என்ற புனைகதை ஒன்றுள்ளது. கொள்கை மட்டத்திலும், அடிமட்டங்களிலுள்ள மக்கள் நிலையிலும் உள்ளூர் இயலுமைகளைக் கட்டி எழுப்புதல் மற்றும் நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல் என்பவை முக்கியமானவையாகும்.

## நடவடிக்கைக்கான அழைப்பு

1. மீள்வருகை அல்லது மீள்குடியேற்றம் காரணமாக ஏற்படும் சமூகச் சீர்குலைவுகள் பல வருடங்களுக்கு நீடிக்கும் என்பதை அங்கீகரிக்கும் வகையில் நீண்டகால மீளிணைப்பு நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்.

2. இடம்பெயர்ந்தோர் வேலைவாய்ப்பு வழிகளைப் பெற்றுக்கொள்வதற்கும், சுயசார்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் உதவும் வகையில் அவர்களுக்கு மீள்பயிற்சி அல்லது பதிய திறன்களைக் கற்பித்தல் சம்பந்தமான திறன்கள் அபிவிருத்திக்கு நிதிகளைச் செயற்படுத்துதல்.

3. முரண்பாட்டுப் பிரதேசங்களில் ஜனசமூகங்களின் சமூகப் பொருளாதார இழைமானத்தை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுல். இதனால் இவர்கள் இடம்பெயர்வதற்கான அழுத்தங்கள் குறைவடைந்து,

அவை தடுக்கப்படுவதோடு புனருத்தாரணம் வலுவடைவதற்கும் வழிபிறக்கின்றது.

4. இடம்பெயர்ந்தோர் தமது விடயங்கள் குறித்து தீர்மானங்கள் எடுப்பதற்கும், இறுதியில் சுய சார்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு, உதவும் வகையில் அவர்களுக்கு வலுவளித்தல்

5. யுத்தத்தால் பாதிப்புற்ற பிரதேசங்களின் புனர்நிர்மாணம் மற்றும் புனர்வாழ்வுக்கென ஒதுக்கியளிக்கப்பட்ட பணம் சம்பந்தமாக உள்ளூர் ஜனசமூகங்கள் கண்காணிப்பை மேற்கொள்ளுதல்.

## பின்னூட்டலும், கண்காணிப்பும்

திரும்பிவருவோரிடமிருந்து பின்னூட்டலைப் பெற்றுக் கொள்வதற்கான எந்த வழிமுறையமைப்புகளும் தற்போது இல்லை. செயல்முறையைக் கண்காணிப்புச் செய்வது, மதிப்பீடு செய்வது மற்றும் வகைப்பொறுப்புள்ளோரைத் தீர்மானிக்கும் எந்தவித வழிமுறையமைப்பும் தற்போது இல்லை. பங்கேற்புக் கண்காணிப்பு என்பது ஒரு கருத்தாக இருந்தபோதிலும், அதை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு விருப்புறுதி அவசியமாகும். தற்போது "பூரணமான ஒருங்கிணைப்பை" அளவீடு செய்வதற்கான நிலையான காட்டிகள் எதுவுமில்லை. மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் மீறல்களைக் கண்காணிப்பதோடு கூடிய வழிமுறையமைப்புக்களும் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறுதல் வேண்டும்.

### நடவடிக்கைக்கான அழைப்பு

1. மேலே விதந்துரைக்கப்பட்டவாறு, மீள்வருகை, மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக்குப் பொறுப்பான மாவட்டக் கூட்டிணைப்பு அமைப்பொன்றை ஏற்படுத்துதல். இந்த அமைப்பு அனைவரையும் உள்ளடக்கும் ஒன்றாகையால், ஒரு பங்கேற்புக் கண்காணிப்புச் செயல்முறை ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

2. கிரமமான காலப்பகுதிகளில் முன்னேற்றத்தை மீள்பார்வை செய்யும் வகையில், பல்வேறு நலன் பிரதிநிதிகளை ஒன்றுபடுத்தும் வகையில் மாவட்ட அடிப்படையிலான கூட்டமைப்புகள் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிக்கக்கூடியவை என்பதை ஏற்றுக் கொள்ளுதல்.

3. மீள்வருகை மற்றும் மீள்குடியேற்றப் பிரதேசங்களில் மனித உரிமை நிலைமைகளைக் கண்காணிப்பு செய்யும் வழிமுறையமைப்புகளை ஏற்படுத்தல்.

4. இறுதியாக இடம்பெயர்ந்தோர் திரும்பிவருதல் சம்பந்தமான முன்னேற்றத்தைக் கண்காணிப்பு செய்யும் வேலையை அவர்களிடமே விட்டுவிடுதல்.

# பகுதி 3

## முடிவுரை

பாரிய இடம்பெயர்வு மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தீர்வுகளைத் தேடுதல் போன்ற பாரிய பிரச்சினைகளைக் கையாளுதல் மிகவும் சிக்கலான ஒரு பணியாகும். மனிதாபிமான உதவிகளை மாத்திரம் வழங்குவது அபாயகரமான சூழ்நிலைமைகளை ஸ்திரநிலைப்படுத்திவிட முடியாது என்பதை அறிந்துகொள்வதே ஆரம்பநிலையாகும். இடம்பெயர்வு மோதலின் விளைவாக ஏற்படும்பொழுது சமாதானத்தை மீட்டெடுத்து, அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அதேநேரத்தில் முன்னெடுப்பதன் மூலம் மாத்தரமே பாதுகாப்பான மற்றும் நிலைபேறான மீள்வருகை பயனுறுதியுள்ள முறையில் சாத்தியமாகும். பயனுறுதி கிட்டவேண்டுமாயின், மனித உரிமைகளுக்கும், ஜனநாயக ரீதியான பங்கேற்புக்கும் மதிப்பை முன்னேற்றுவதோடு, இடம்பெயர்ந்தோருக்கும், ஏனைய பாதிப்புற்ற மக்களுக்கும் பொருளாதார வாய்ப்புகளை உத்தரவாதமளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் கைகோர்த்து முன்செல்ல வேண்டும்.

இலங்கையில் அரசாங்க உதவிகள் மக்கள் திரும்பிவருவதை ஊக்குவித்துள்ளபோதிலும், அரசாங்கம் அவர்களைத் திரும்பிவருமாறு பலவந்தப்படுத்தவில்லை. திரும்பிவருபவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் விடயத்திலும் விசேட கவனம் அவசியமாகும். இடம்பெயர்ந்தோர் திரும்பிவரும் வேளையில் அவர்களின் காணிகள் மற்றும் தனிப்பட்ட சொத்துகள் ஏனையோரால் அபகரிக்கப்பட்டும், இப்பிணக்குகளைத் தீர்ப்பதற்கு நீதிமுறைமையெதுவும் இல்லாமலும் இருப்பின் மீள்வருகையும் இடம்பெயர்வைப் போலவே உள அதிர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாகலாம். சமாதானம் ஏற்பட்ட பின்னரும் கிராமங்களிலும், நகரங்களிலும் நிலவும் தீராத பகைகள் திரும்பிவருவோரை இலக்குவைக்கலாம். இச்சந்தர்ப்பங்களில் பல்வேறு இனத்துவ, மத மற்றும் ஜாதிகளைச் சேர்ந்த ஜனசமூகங்களிடையே மீளிணக்கத்தை முன்னேற்றுவதும், காணி மற்றும் சொத்துப் பிணக்குகளுக்குச் சமாதானமான, ஒப்புரவான தீர்வுகளை ஊக்குவிப்பதும் முக்கியமானதாகும்.

நிலக்கண்ணிப் பிரச்சினைகள் மீள்வருகை, பயிர்ச்செய்கை, பொருளாதார அபிவிருத்தி, கல்வி மற்றும் ஏனைய சகல சமூக, பொருளாதார பிரச்சினைகளில் தாக்கங்களை

ஏற்படத்தக்கூடியதாகையால் இயன்றளவு விரைவில் இதற்குத் தீர்வு காணப்படுதல் வேண்டும்.

நிவாரணத்தை அபிவிருத்தியுடன் ஒன்றிணைப்பது முக்கியமானதாகும். அவசரகால உதவி வழங்குவதும், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுவதும் சமகாலத்தில் இடம்பெறுதல் வேண்டும். அபிவிருத்திக்கான அடித்தளத்தை இடும்வகையில் நிவாரண நிகழ்ச்சித்திட்டங்கள் வடிவமைக்கப்படுதல் வேண்டும். இடம்பெயர்ந்தோர் திறன்களை இழந்துவிட்டால் அவர்களுக்கு மீள்பயிற்சி வழங்க வேண்டும் அல்லது புதிய திறன்களைக் கற்பித்தல் வேண்டும்.

உதவி வழங்குவோர் மற்றும் அரசியற் பேச்சுவார்த்தைகளில் சம்பந்தமுற்றோர் நெருக்கமாக விடயங்களைக் கூட்டிணைப்புச் செய்து, உதவி குறித்த தலையீடுகள் பேச்சுவார்த்தைச் செயல்முறைக்கு ஆதரவு வழங்குவதை உறுதி செய்தல் வேண்டும். உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் முரண்பாடு எழுவதற்கு முன் சமூகம் எதிர்நோக்கிய அபிவிருத்திப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பது அவசியமாகும். முரண்பாடுகள் ஆழமான பிளவுகளை ஏற்படுத்துவதால் அவற்றை வெறுமனே அவசரகால நிவாரணம் வழங்குவதன் மூலமாக நிவர்த்திக்க முடியதென்பதை மனதில் இருத்துவது முக்கியமானதாகும். இந்த முயற்சிகள் ஒன்றிணைக்கப்படுவதோடு, தடுப்பு, பாதுகாப்பு, மீளிணைப்பு மற்றும் அரசியல் மீளிணக்கத்துக்கான வழிமுறையமைப்புக்களும் இருத்தல் வேண்டும். இலங்கையில் உள்ள இன்னுமொரு சவால் இடம்பெயர்ந்தோருக்கான பயனுறுதியுள்ள தீர்வுகளை முன்னேற்றுவதில் விடயங்களைக் கூட்டிணைப்புச் செய்யும் பிரச்சினையாகும். அதிகாரித்துவ வாதம், தமது பிரதேசங்களைப் பாதுகாத்துக்கொள்ளல், முகவர் நிலையங்களிடையே பகைமை உணர்வுகள் மற்றும் நிதியளிப்புகள் கிட்டாமை போன்ற விடயங்கள் ஓர் ஒத்துழைப்பு முறைமையின் செயற்பாட்டுக்குத் தடையாக விளங்கி வந்துள்ளன. இந்த உத்தி செயற்பட வேண்டுமெனில், சகல நலன்பிரதிநிதிகளும் அர்ப்பணிப்புணர்வுடன் பணியாற்ற வேண்டும். அதன் பின்னரே உண்மையான சமாதானம், அபிவிருத்தி மற்றும் நீதி என்பவை சாத்தியமாகும்.

# பின்னிணைப்பு 1

## முறையியல்

## மீள்வருகை, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான செயற்பாட்டாளரின் கருவித்தொகுதி

இது உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் மீள்வருகை, மீள்குடியேற்றம், மீளிணைப்பு, புனருத்தாரணம், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி என்பவற்றில் சம்பந்தமுற்ற சகல நலன்பிரதிநிதிகளுக்குமான நடைமுறை வழிகாட்டியாக அமையும். இது உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வழிகாட்டற்கோட்பாடுகளை, கைக்கருவித்தொகுதி மற்றும் ஏனைய விடயங்களைப் பயன்படுத்துபவருக்குச் சாதகமான ஒரு தொகுதியாக மாற்றியமைக்க உதவும். இது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வடிவமைக்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்படும். இது செயற்கள அமர்வுகள் மற்றும் ஊடகங்கள் மூலம் பரப்பப்பட்டு, முன்னெடுக்கப்படும். செயற்பாட்டாளரின் கைக்கருவித்தொகுதி ஓர் அடிப்படை ஆவணமாக முன்னேற்றப்படும். இதில் பின்னூட்டல் மற்றும் மதிப்பீடு என்பவை முக்கிய அம்சங்களாக அமையும்.

1. நலன்பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனைகள்
2. தற்போதுள்ள ஆவணங்களை மீள்பார்வை செய்தல் – வழிகாட்டற்கோட்பாடுகள், கைநூல், வெளிக்கள நடைமுறை குறித்த கைநூல், கைக்கருவிகள்தொகுதி போன்றவை.
3. உள்ளடக்கத்தை அபிவிருத்தி செய்தல்.
   - மீள்வருகை மற்றும் மீளிணைப்பு குறித்த கோட்பாடுகள்
   - சிறுபான்மையோர் பாதுகாப்பு
   - சொத்துக்களை மீளப்பெறுதல்.
   - நட்டஈட்டுப் பிரச்சினைகள்.
   - உதவி குறித்த அதிகுறைவான நியமங்கள்.
   - உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தமது நிலைக்கு முடிவைத் தீர்மானித்தல்.
   - பங்கேற்பு அபிவிருத்தி மற்றும் ஜனசமூக அணிதிரட்டல் மற்றும் செயற்பாடு சம்பந்தமான கோட்பாடுகள்.
4. வடிவமைப்புக் குழுவை ஏற்படுத்துதல்.
5. உள்நாட்டில் இடம்பெயர்வு சம்பந்தமான புரூகிங்ஸ் SAIS கருத்திட்டத்துடன் கலந்தாலோசனை.
6. வாசகர்களின் மீள்பார்வை

## பின்னிணைப்பு 2

**நலன்பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனைகள்**.

தனிப்பட்ட மற்றும் இணைப்புக் கலந்தாலோசனைக் கூட்டங்கள்:

1. திரு. ஜயரட்ணம்– அகதிகள் புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண அமைச்சு.
2. திரு. விஸ்வலிங்கம் – அரசாங்க அதிபர் – முல்லைத்தீவு
3. திருச்செல்வி. ஓர்வசி பட்டேல் – சிரேஸ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் – UNHCR.
4. திரு. பிரட்மன் வீரக்கோன் – பிரதமரின் செயலாளர்.
5. திருச்செல்வி. எமெல்டா சுகுமார் – அரசாங்க அதிபர்– மன்னார்.
6. திரு. கே. கணேஷ் – அரசாங்க அதிபர் – வுவுனியா
7. திரு. லோரன்ஸ் கிறிஸ்டி – தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO), கிளிநொச்சி.
8. திரு. கே. சண்முகலிங்கம், கிழக்கு அபிவிருத்தி அமைச்சு .
9. திரு. பீ. நரசிங்கம் – தலைவர், அசாநி ஒன்றியம், வவுனியா
10. திரு. தர்மகுலசிங்கம் – வன்னிப் புனர்வாழ்வுக்கு உதவும் அமைச்சு
11. திரு. எஸ். சிவதாசன், செயலாளர், வடக்குக் கிழக்கு மாகாணசபை, புனர்வாழ்வு.
12. திரு. ரவீந்திரன் – மனித உரிமைகள் ஆணைக்குழு.
13. திரு.செல்வின் இரேனியஸ் – பணிப்பாளர் சிரான் (வடக்கின் உடனடி மனிதாபிமான நிவாரண உதவிகளுக்கான உபகுழு) கிளிநொச்சி.

14 திருச்செல்வி. செல்கா சீனியர் – பாதுகாப்பு மதியுரைஞர் – டென்மார்க் அகதிகள் மன்றம்.

15. திரு. வீ. தியாகராஜா, அசாநி ஒன்றியம் – யாழ்ப்பாணம்

16. பின்வரும் பிரதேசங்களில் சமீபத்தில் குடியேறிய அல்லது புதிய இடங்கள் வழங்கப்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் சம்பந்தமான வெளிக்கள விஜயங்களும், கலந்தாலோசனைக் கூட்டங்களும்.

மன்னார்

புத்தளம்

யாழ்ப்பாணம்

கிளிநொச்சி

மட்டக்களப்பு

வாழைச்சேனை

திருகோணமலை

வவுனியா

அம்பாறை